

குழந்தைகள் பத்திரிகை
31-8-1975
60 காசு

கோகுலம்




ஜெம்ஸ் கேளிக்கை பாரீர்!
இந்த ராசிகளின்
சின்னங்களைக் கண்டிடுவீர்
1
2
3
4
5
6
1. சிம்மம் 2. மிதுனம் 3. ரிஷபம்
4. மகரம் 5. விருச்சிகம் 6. மேஷம்
Cadbury's
MILK CHOCOLATE
GEMS
வண்ண வண்ண
சாக்கலேட்
ஜெம்ஸ்
காட்பரிஸ்
ஜெம்ஸ் – குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்!
AIYARS.C.332 TM

கோகுலம்

மலர் 4 ○○○ இதழ் 11

ஆகஸ்ட் 31, 1976 ராட்சஸ ஆவணி 15

புதிய சந்தா விகிதம்

இந்தியா	ஒரு வருடம்	ரூ. 16.00
	ஆறு மாதம்	ரூ. 7.60
இதர வெளிநாடுகள்	ஒரு வருடம்	ரூ 33.00
	ஆறு மாதம்	ரூ. 16.60

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

விநோத வண்ண மாலை

அணியும் உடைக்கு ஏற்ப 'மாட்ச்'சாக மாலை அணிந்து கொள்ள உங்களுக்கெல்லாம் ஆசையாக இருக்கும். ஆனால் எவ்வளவு கலர்களில் எத்தனை மாலை (நெக்லஸ்)களை வாங்க முடியும்? இதோ நீங்களே சுலபமாகவும் மலிவாகவும் தயாரித்துக் கொள்ளலாம், இந்த விநோதமான பிளாஸ்டிக் மாலைகளை. 'ஒயர் பாக்' போடுவதற்கு உங்கள் அம்மா பிளாஸ்டிக் சாமான்கள் வாங்குவாளில்லையா? அதே கடையில், நடுவே 'போலா'க் குழாய் போல உள்ள மெல்லிய பிளாஸ்டிக் டியூப் ஒவ்வொரு கலரிலும் மூன்று மூன்று கெஜம் வாங்கிக் கொள்ளுங்கள். இந்தக் குழாய்களை முக்கால் அங்குலங்களாக வெட்டிக் கொள்ளுங்கள். வெட்டும்போது ஸ்லோப்பாக — சாய்வான கோணத்தில் — வெட்டவும். இப்படி வெட்டிய துண்டுகளின் நடுவே ஊசியால் துவாரமிட்டு ஒரு கயிற்றில் கோருங்கள். கயிற்றின் ஒரு முனையில் ஒரு பெரிய முடிச்சைப் போடுங்கள். இது கொக்கி. இன்னொரு முனையில் சுருக்குப் போடுங்கள். இது லூப். இதனுள் அந்த முடிச்சை நுழைத்தால் மாலை கழன்று கொள்ளாமல் நிற்கும். மாலை தயார். எலாஸ்டிக் கயிற்றில் பிளாஸ்டிக் துண்டுகளைக் கோத்தால் நெக்லஸ். நூலில் கோத்தால் மாலை.

உருவத்துக்கு ஏற்ப...

நீங்கள் ஒல்லியா, உயரமா, குட்டையா, குண்டா? உங்கள் உருவ அமைப்பு எப்படியானாலும் சரி. இயற்கை அளித்த சில கோளாறுகளை நாம் நம்முடைய திறமையினால் நேர் செய்து நேர்த்தியாகத் தோன்றலாம்.

நீங்கள் குட்டையானவரா? அப்படியானால் இப்படிச் செய்யுங்கள்;

☐ கோடு போட்ட துணிகளை ஆடைகளுக்கு வாங்க நேர்ந்தால் செங்குத்தான கோடுகள் உள்ளதாக வாங்கி உடை தயாரித்துக் கொள்ளுங்கள். இந்தக் கோடுகள் உங்களை உயரமாகக் காட்ட உதவும்.

☐ மேலே ஒன்று கீழே ஒன்று என்று தனித் தனியாக இரு பாகமான உடைகளை அணியாமல் ஒரே கவுனாக அணியுங்கள். இரு ஆடைகளானால் ஒரே கலராக இருக்கட்டும்.

இவைகளைச் செய்யாதீர்கள்

☐ கவுனில் இடுப்புக்கு பெல்ட் போன்ற பட்டை இருக்குமானால் அது அகலமில்லாததாக இருக்கட்டும்.

☐ பெரிய பூக்களோ, பிரிண்ட்களோ உள்ள ஆடைகளைத் தேர்ந்தெடுக்காதீர்கள். சின்னப் பூக்கள் உள்ளதாக வாங்குங்கள்.

☐ கவுனின் கழுத்துப் பக்கத்தில் பெரிய காலராக வைக்க வேண்டாமென்று தையற்காரரிடம் கூறுங்கள். அதே மாதிரி இடுப்புக்குக் கீழுள்ள தொங்கும் பகுதியில் அழகுக்காகப் பைகளை வைக்கச் சொல்லாதீர்கள்.

☐ ஸ்கர்ட்டில் பெரிய மடிப்புக்கள் வேண்டாம். அது உயரமானவர்களுக்குத்தான் எடுப்பாக இருக்கும்.

☐ நீளமான ஸ்கர்ட்டுகளையும் நீளமான ஜாக்கெட்டுகளையும் அணியாதீர்கள். இடுப்புக்குச் சற்று மேலாக வரும்படியான ஜாக்கெட்டுகளே உங்களுக்கு ஏற்றவை.

☐ பெரிய பித்தான்களும் உங்கள் தோற்றத்தைப் பாதிக்கும்.

(அடுத்த இதழில் உயர்ந்தவர்களுக்குச் சில உபயோகமான யோசனைகள்.)

— கே. சாந்தா





அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

11. விதிவழி மதி செல்லும்

ஓர் ஊரில் கோடீசுவரர் ஒருவர் பெருமிதத்துடன் வாழ்ந்தார். அவருக்கு நெடுங்காலம் மகப்பேறு இன்றி, தெய்வத் திருவருளால் அவர் மனைவி கருவுற்றாள். கரு வளர்ந்து பிரசவ சமயம். அங்கு அவளை ஆண் மருத்துவர்களும் பெண் மருத்துவச்சிகளும் கூடி உபசரித்துக்கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் பற்றற்ற ஒரு பரம ஞானி அந்தத் திருமாளிகைக்கு முன் உணவு நாடிக் கையேந்தி நின்றார். பிரமதேவன் அவ்வீட்டுக்குள் நுழைவதை ஞானி கண்டார். அவ்வுருவம் மற்றவர் கண்களுக்குத் தெரியவில்லை.

ஞானியார், ''வாணி கேள்வனே! என்ன அவசரமாகச் செல்லுகின்றீர்?'' என்று கேட்டார். ''பிறக்கின்ற குழந்தைக்குத் தலையில் அதன் வாழ்க்கையை எழுதப் போகிறேன். என்னைத் தடை செய்யாதீர்'' என்று கூறிவிட்டு, நான்முகக் கடவுள், பிறக்கின்ற குழந்தையின் தலையில் எழுதிவிட்டுத் திரும்பினார்.

''பிரமதேவனே! என்ன எழுதினீர்?'' என்று கேட்டார் ஞானியார். ''தேவ ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்தக் கூடாது. நீர் பரம ஞானி. அதனால் உமக்கு உரைக்கின்றேன். பிறந்த குழந்தை ஒரு மாட்டினால் ஜீவனம் நடத்தும்'' என்று கூறிவிட்டுப் பிரமதேவர் மறைந்துவிட்டார்.

இதனைக் கேட்ட ஞானியாருக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று. 'கோடீசுவரனுடைய குமாரனுக்கு ஒரு மாட்டினால் வாழ்வா? இது என்ன அதிசயம்?' என்று அவ்விடம் விட்டுச் சென்றார்.

பின்னர் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு அப்பால் அந்த ஞானியார் அதே ஊருக்கு வந்தார். அன்று பிறந்த புதல்வன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துச் சென்றார். அவன் அவரைப் பணிந்து நின்றான். ஞானியார் அவனுடைய நலனை வினவினார்.

''சுவாமி! என் தந்தை கோமகவரர். நான் அவருடைய ஏகபுத்திரன். என் பேர் தனகோடி. என் பிதா மறைந்தவுடன் எனக்கிருந்த செல்வம், வீடு வயல்கள் அனைத்தும் பலப்பல துறைகளில் மறைந்து விட்டன. இந்தக் குடிசையில் வாழ்கின்றேன். ஒரு கிழட்டு மாடு மட்டும் மிஞ்சியிருக்கிறது. அடுத்த வீட்டுக்காரனிடம் ஒரு வண்டி உள்ளது. பகலில் இந்த மாட்டைக் கண்டால் எவனும் வண்டியில் ஏற மாட்டான். நான் அடுத்த வீட்டானுடைய வண்டியை வாங்கி மாட்டைப் பூட்டி இரவில் வாடகைக்கு வண்டி ஓட்டுவேன். இரவெல்லாம் உழைத்தால் இரண்டு ரூபாய்கள் கிடைக்கும். அரை ரூபாய் வண்டிக்கு உடையானிடம் தருவேன்.



அரை ரூபாய்க்கு மாட்டுக்குத் தீனி வாங்கிப் போடுவேன். மீதி ஒரு ரூபாய்க்குக் கம்பு, கேழ்வரகு வாங்கி, கஞ்சி, களி செய்து நானும் என் மனைவியும், என் மக்களும் அரை வயிறு கால் வயிறு சாப்பிட்டுச் சுகம் என்பது என்ன என்று தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு மாட்டினால் ஜீவனம் நடைபெறுகின்றது'' என்று கூறிக் கண்ணீர் வடித்தான்.

ஞானியார், ''அன்பனே! நீ பிறந்த அன்று நான் உன் மாட மாளிகையில் இருந்தேன். உன் தந்தையாரையும், அவர் வாழ்ந்த பெருமித வாழ்வையும் நான் அறிவேன். உன் வாழ்வில் எனக்கு அக்கறையுண்டு. நீ சுகமே வாழவேண்டும் என்று மனப்பூர்வமாக எண்ணுகிறேன். நீ என் சொல்லைத் தட்டாதே இந்த மாட்டை விற்றுவிடு'' என்றார்.

தவகோடி, ''அடிகளே! உமது ஆலோசனை அழகாக இருக்கின்றதே ? விதை நெல்லைக் குத்திச் சமைத்துச் சாப்பிடச் சொல்கின்றீரே! எனக்கு ஒரு வேலையும் தெரியாது. மூன்று குழந்தைகளும் என் மனைவியும் நானும் இந்த ஒரு மாட்டால் ஜீவிக்கின்றோம். இதை விற்றுவிட்டு நான் என்ன செய்வேன்? பட்டினியில் சாவதா?'' என்றான்.


''அன்பா! நான் உனக்குத் தீங்கு செய்வேனா? மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம். பதில் பேசாதே. உன்னைப் பற்றி நீ கவலைப்படாதே. கவலைப்பட வேறு ஒருவன் இருக்கின்றான். சீக்கிரம் மாட்டை விற்றுவிட்டு வா'' என்று ஞானியார் கட்டளையிட்டார்.

அவன் அவரது சொற்களை மறுக்க அஞ்சி, மனம்இன்றி மாட்டை விற்றான். ஐம்பது ரூபாய்தான் வந்தது. ''சுவாமி உதவாத மாடு. ஐம்பது ரூபாய்க்கு விற்றேன். இன்னும் ஒரு ஐம்பது ரூபாய் ஒருவரிடம் கடன் வாங்கி நூறு ரூபாய்க்கு நல்ல மாடாகப் 'பிடித்துக் கொஞ்சம் நல்ல வாடகைக்கு வண்டி ஓட்டிப் பிழைத்துக் கொள்கின்றேன்'' என்றான். விதிவழி மதி செல்கின்றது.

ஞானியார், ''அன்பனே! வேண்டாம். ஐம்பது ரூபாய்க்கு அரிசி பருப்பு காய்கறிகள் வாங்கி வறியவர்க்கு அன்ன தானம் செய்க'' என்றார்.

''சுவாமி! நான் அன்ன தானம் செய்வதா? எங்கள் குடும்பமே வறுமையில் வாடி வதங்குகின்றதே'' என்றான்.

''என் அறவுரையைத் தட்டாதே. நீ சுகமே இருப்பாய். சொன்னபடி செய்' என்று ஆணையிட்டார்.



அப்படியே அன்னதானம் செய்தான். அவனும் மனைவி மக்களும் வயிரார உண்டு உவந்தார்கள். பொழுது போயிற்று. ஞானி திண்ணையில் படுத்துக்கொண்டார். தனகோடி பாயின்றி வெறுந் தரையில் படுத்தான்; தூக்கம் வருமா? பரதேசியின் பேச்சைக்கேட்டு மாட்டை விற்றுவிட்டோமே? நாளை என்ன செய்வது என்ற ஏக்கம். தூக்கம் வரவில்லை. இரவு ஒரு மணி. சிறுநீர் கழிக்கத் தோட்டத்துக்குச் சென்றான்.

பிரமதேவர், 'ஒரு மாட்டால் ஜீவனம் — என்று இவன் தலையில் எழுதினேமே, அடிகளார் மாட்டை விற்கு மாறு செய்து விட்டாரே. நாளைக்கு இவனுக்கு ஒரு மாட்டினால் பிழைப்பு நடைபெற வேண்டுமே?' என்று எண்ணி ஒரு பெரிய காளை மாட்டைத் தோட்டத்தில் விட்டுச் சென்றார்.

தனகோடி வெள்ளை வெளேர் என்று நிற்கின்ற உயர்ந்த மாட்டைக் கண்டு அதிசயம் அடைந்தான். அடிகளாரிடம் வந்தான். ''சுவாமி! ஒரு காளை மாடு யாருடையதோ; கயிலாயத்தில் உள்ள ரிஷபதேவரைப் போல் என் தோட்டத்தில் நிற்கின்றது'' என்றான்.

அடிகளார், ''அன்பனே! அது உன் மாடுதான். போய்ச் சுகமே தூங்கு'' என்றார். அவன் உறங்கினனில்லை. மாட்டின் அருகிலேயே அமர்ந்து விட்டான்.

பொழுது புலர்ந்தது. ''சுவாமி! ஒரு வண்டி செய்து கொண்டு இந்த மாட்டைக் கொண்டு வண்டி ஓட்டினால் தினம் இருபது முப்பது என்று வாடகை வரும். அதைக் கொண்டு என் காலத்தைக் கழிப்பேன்'' என்றான்.

ஞானியார் ''ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் உடனே மாட்டை விற்று விட்டு வா'' என்றார். மாட்டை விற்றான். ஆயிரம் ரூபாய் வந்தது. ''நல்ல சமையல்காரனை வைத்து வடை பாயசத்துடன் சேரி வாழ் ஏழை மக்களுக்கும் எளியவர்களுக்கும் அன்னதானம் செய்'' என்றார். அதுபடியே செய்தான். அவனும் உண்டு உவந்தான்.

அன்றிரவும் பிரமதேவன் ஒரு மாட்டைக் கொண்டு வந்து அவன் தோட்டத்தில் கட்டிவிட்டார்.

அவன் அதிசயித்தான். ''சுவாமி! இன்னொரு மாடு வந்துள்ளது. இதனை வைத்து வாழ்வேன்'' என்றான். ''அப்பா! இதையும் விற்றுவிடு. நாளை ஒரு மாடு வரும்'' என்றார் சுவாமி. ''தினம் ஒரு மாடு வருமா? அப்படியானால் நாளை வரும் மாட்டையும் இதையும் சேர்த்து இரட்டை மாட்டு வண்டி வைத்துப் பிழைத்துக் கொள்வேன்'' என்றான். ''அப்பா! இதை விற்றால்தான் மறு மாடு வரும். இதனை விற்றுவிட்டு வா'' என்றார் ஞானியார். அவன் விற்றான். ஆயிரத்தைந்நூறு ரூபாய்கள் வந்தன. ''அன்பனே! ஏழைகளுக்குத் துணிகள் வாங்கித் தானம் செய்'' என்றார். அவன் அதுபடியே செய்தான். அவனும் மனைவி மக்களும் நல்ல துணிகளை உடுத்திக் கொண்டனர்.

இப்படி முப்பது நாட்கள் கடந்தன.

பிரமதேவர், சுவாமிகளிடம் வந்து, ''ஐயா! உம்மால் எனக்குத் தினமும் ஒரு மாடு கட்டும் தொல்லை உண்டாகிறது. நீர் தயவுசெய்து யாத்திரை நெறியில் செல்லும்'' என்று வேண்டிக் கொண்டார். அடிகளார் அவனை வாழ்த்திவிட்டுச் சென்றார். அவன் ஒரு மாட்டால் ஜீவித்துக்கொண்டிருந்தான்.


விதி வழி மதி என்பது இதனால் விளங்குகிறது.

கடவுளின் கதை

மூவேந்தருள் ஒருவரான தொண்டைமான் சக்கரவர்த்தி சிறந்த சிவபக்தர். ஒருமுறை அவர் எதிரியிடம் தோற்று ஓடிவருகையில் திருமுல்லைவாயிலுக் கருகில் அவருடைய யானையின் காலில் ஒரு முல்லைக் கொடி சிக்கிக்கொண்டு அவரை மேலே செல்ல முடியாமல் தடுத்தது. கோபமடைந்த சக்கரவர்த்தி தம் உடைவாளால் அக்கொடியை வெட்ட, வெட்டிய இடத்தில் குருதி வடிந்தது. திடுக்கிட்ட சக்கரவர்த்தி முல்லைக் கொடியை விலக்கி அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தார். அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் பிளவுபட்ட நிலையில் இருப்பதைக் கண்டார். சிறந்த சிவபக்தரான அவர், தாம் அபசாரம் செய்துவிட்டதை நினைத்துப் பதறித் தம்முடைய உடைவாளால் தம்மை மாய்த்துக்கொள்ளக் கருதி அதைச் செயல்படுத்தத் துணியும் போது சிவபெருமான் பார்வதி சமேதராய் ரிஷப வாகனத்தில் காட்சி தந்தார். அரசனைப் பார்த்து ''நான் பிளவுபட்டதை நினைத்து நீ வருந்த வேண்டாம். யாம் 'பிளவுபட்டபோதிலும் மாசிலாமணியேயாவோம்'' என்று கூறி அபயமளித்து, அவரை எதிரி துரத்தி வருகிறானா என்று பார்க்க நந்தி பகவானுக்குக் கட்டளையிட்டார். தொண்டைமான் அந்த இடத்திலேயே சிவனுக்கு ஓர் ஆலயம் கட்டினார். எதிரி வருகிறானா என்று பார்ப்பது போலவே இன்றும் பெருமானுக்கு முதுகு காட்டி அமர்ந்துள்ளார் நந்திதேவர். இன்றும் மாசிலாமணீசுவரரின் உருவத்தில் கத்தியினால் உண்டான பிளவைக் காணலாம்.

— என். எஸ். பிரசன்னா, அம்பத்தூர், வயது—14

எது உண்மையான மதம்?



அரேபியாவில் ஒரு பணக்கார யூத வர்த்தகன் இருந்தான். அந்த நாட்டை ஆண்டு வந்த பாதுஷாவுக்கு அவன் சொத்துக்களை எப்படியாவது பறித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணம்.

பாதுஷா ஒரு நாள் அந்த யூதனைத் தன் சபைக்கு வரவழைத்து ''எந்த மதம் உண்மையான மதம்?'' என்று கேட்டார்.

யூதன், 'கிறிஸ்துவ மதமோ, யூத மதமோதான் உண்மையானது என்று கூறினால் முகம்மதிய மதத்தைப் போலி என்று இழித்துக் கூறியதாக அவன்மீது குற்றம் சுமத்துவது. அப்படி இல்லாமல் தனக்குப் பயந்து முகம்மதியமதமே உண்மையானது என்று சொன்னால் அவனை முகம்மதியனாக மாறச் சொல்வது. அப்படி அவன் மதம் மாறச் சம்மதியாவிடில் அவனைக் கொன்று விடுவது என்பதாகப் பாதுஷா தீர்மானித்து வைத்திருந்தார்.

ஆனால் அந்த யூதனோ சாமர்த்திய சாலி. மேற்படி கேள்விக்குப் பின்வருமாறு பதில் அளித்தான்.

''ஓர் ஊரில் ஒரு பெரிய செல்வந்தன் இருந்தான். அவனிடம் விலை மதிக்க முடியாத வைரம் ஒன்று இருந்தது. அவனுக்குப் பிள்ளைகளோ மூன்று. வைரமோ ஒன்று. என்ன பண்ணுவது என்று அவன் யோசித்தான். ஒரு வைர வியாபாரியிடம் தன்னிடம் இருக்கும் வைரத்தைப் போலவே வேறு இரண்டு போலி வைரங்களை இரகசியமாக வாங்கி வைத்தான்.


''தன் அந்திமகாலம் நெருங்கியவுடன் ஒவ்வொரு பிள்ளையையும் தனித்தனியே வரவழைத்து, ஒவ்வொரு வைரத்தைக் கொடுத்து 'மகனே! உன்னிடம்தான் இந்த வைரத்தை ஒப்படைக்கிறேன். இதை உன்னிடம் கொடுத்திருப்பதாக மற்றவர்களிடம் தெரிவியாதே!' என்று சொல்லிவிட்டுத் தனக்குப் பிடித்தமான பிள்ளையிடமே அந்த உண்மையான வைரத்தைக் கொடுத்துவிட்டு இறந்துபோனான்

''ஒவ்வொரு பிள்ளையும் தன்னிடம் இருப்பதுதான் உண்மையான வைரம் என்று நினைத்துச் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். அதுபோல் அவரவர் தங்கள் தங்கள் மதம்தான் உண்மையான மதம் என்று நினைத்துக் கொள்ளலாம். ஆனால் உண்மையான மதம் எது என்பது மேற்படி செல்வந்தனைப் போல, அவைகளை உண்டுபண்ணிய கடவுளுக்குத்தான் தெரியும்!''

யூதனின் பதிலைக் கேட்ட பாதுஷா அவனுடைய சாமர்த்தியமான பேச்சை மெச்சி நிறையச் சன்மானம் கொடுத்தார்.

— எட்டயபுரம் கே. கே. ராஜன்

ஃபிரான்ஸ் தேசத்தின் அரசர் ஆறுவது சார்லஸின் அருமை மகள். அழகு மலர். தாயாரின் பெயர் இஸபெல்லா. மன்னருக்கு இஸபெல்தான் மூத்தபெண். இளவரசி இஸபெல்லுக்குப் பல சகோதரரும் சகோதரியு மிருந்தனர். எல்லாருமே அழகான குழந்தைகள்தான். என்றாலும் இஸபெல் எல்லாரையும்விட அழகி. ரொம்பப் புத்திசாலியும்கூட. இஸபெல்லுக்கு ஆறு வயது ஆனபோது, தாயார் தம் மகளுக்குச் சங்கீத மேதைகளைக் கொண்டு இசைப் பயிற்சி அளித்தாள். லத்தீன், பிரெஞ்சு மொழிகளைக் கற்பித்தாள்.



இஸபெல் ஓர் இளந்தளிர்

•கௌசிகன்•

இஸபெல் கற்பனை உள்ளம் கொண்ட குழந்தை. கணப்பின் அருகே தன்னந்தனியாக உட்கார்ந்திருப்பாள். ஆசிரியர்கள் கூறிய மன்னர்களின் கதைகளையும் அவர்களுடைய வீர தீரச் செயல்களையும் இளவரசிகளின் சாகஸங்களையும் பற்றி நினைவுபடுத்திக் கொண்டு மகிழ்வாள். ஒருநாள் கம்பீரமான குதிரைகளின் மீது அரண்மனைக்குச் சிலர் வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து கவசமணிந்த வீரர்கள் கேடயமும், நீண்ட ஈட்டியும் தாங்கி நின்றார்கள். ஈட்டிகளின் நுனியில் சின்னக் கொடிகள் அழகாகப் பறந்து கொண்டிருந்தன.

இஸபெல்லுக்கும் அவள் சகோதர சகோதரிகளுக்கும் வியப்பான வியப்பு. ஆர்வமுடன் அரண்மனைப் பலகணியின் வழியே அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'இவர்கள் யார், எதற்காக இங்கு வந்திருக்கிறார்கள்? இவர்களின் வருகை சண்டைக்கா, சமாதானத்துக்கா?' குழந்தைகளின் வினாக்களுக்கு விடை கூறுவோர் யாருமில்லை. தனக்காகவே அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பது இஸபெல்லுக்குத் தெரியாது.

இங்கிலாந்தின் மன்னன் இரண்டாம் ரிச்சர்டுதான் அவர்களை அனுப்பியிருந்தான். எதற்காக? குழந்தை அழகி இஸபெல்லைத் தனக்கு மனைவியாக்கித் தரும்படி கேட்டு அவர்களைத் தூது அனுப்பியிருந்தான். இதற்கு முன்பே ஒரு தடவை ரிச்சர்டு இது விஷயமாக மன்னர் சார்லஸைக் கேட்டிருந்தான். ஆனால் அதற்கு சார்லஸ் ''இஸபெல் ரொம்பச் சின்னக் குழந்தை'' என்று மறுத்து விட்டார். ஆனால் உண்மைக் காரணம் அதுவல்ல. இஸபெல்லுக்குத் தக்க வயது வந்ததும் அவளை பிரிட்டானியின் பிரபுவுக்கு மனைவியாக்குவதாக முன்பே வாக்களித்திருந்தார்.

ரிச்சர்டு மன்னன் ஒன்றை நினைத்து விட்டானானால் அதை எப்படியும் நிறைவேற்றியே தீருவான். மற்றவர்களின் விருப்பு வெறுப்பைப் பற்றிக் கவலையே படமாட்டான். தனக்கு இஸபெல்லை மனைவியாக்க சார்லஸுக்கு விருப்பமில்லை என்பதை அவன் பொருட்படுத்தவே இல்லை. ஐந்நூறு வீரர்களை அனுப்பித் தன் விருப்பத்தைத் தெரியப்படுத்தச் சொல்லி யிருந்தான்.

இஸபெல்லுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது. அவளைத் தர்பார் மண்டபத்துக்கு அழைத்துப் போக ஆட்கள் வந்தபோது அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள். அப்போதுதான் அவளிடம் உறவினர்கள் நிலைமையை விளக்கினார்கள், அவள் பலகணி வழியாகப் பார்த்து வியந்த போர் வீரர்கள் இங்கிலாந்து மன்னரால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் என்பதை.

அந்தக் காலத்தில் பெண் குழந்தைகள் தவழ்ந்து விளையாடும் பருவத்திலேயே அவர்களுடைய திருமணத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து விடுவார்கள். சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிடும். ஆகவே இஸபெல் தான் கேட்ட செய்தியினால் அதிர்ச்சி யடையவில்லை. அவள் தவிப்பெல்லாம் இங்கிலாந்து மன்னர் எப்படி இருப்பாரோ? அன்போடு பழகு


வாரோ?' என்றுதான். அவளைவிட இருபது வயது மூத்தவர் ரிச்சர்டு மன்னர் என்று கூறியிருந்தார்கள். 'அப்படியானால் கிழவராக இருப்பாரோ? சிடுசிடுவென்று எரிந்து விழுவாரோ? என்னோடு விளையாடவோ, எனக்குக் கதை சொல்லவோ விரும்ப மாட்டாரே' என்று எண்ணியது இஸபெல்லின் குழந்தையுள்ளம். அவளுக்குக் கதைகள் கேட்பதில் ரொம்பப் பிரியமாயிற்றே.

இஸபெல்லை மிக உயர்ந்த ஆடைகளால் அலங்கரித்துக் கீழே உள்ள தர்பார் ஹாலுக்கு அழைத்துப்போனார்கள். பாவம், இஸபெல்லுக்கு ஒரே குழப்பம், கவலை. தர்பார் மண்டபத்தில் இஸபெல்லின் தாயார் இருந்தாள். அது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. இங்கிலாந்து நாட்டுத் தூதுவரை இஸபெல் வரவேற்க வேண்டும். இதற்கு உதவியாக அருகிலேயே இருந்தாள் அம்மா.

இஸபெல் அழகியானாலும், பணக்காரியானாலும் இங்கிலாந்து நாட்டு மக்களுக்குத் தங்கள் மன்னர் ஒரு ஃபிரெஞ்சு இளவரசியை மணப்பதில் விருப்பமே இல்லை. ஃபிரான்ஸ் தேசத்துடன் போர் தொடுக்கவே அவர்கள் விரும்பினார்கள். திருமண ஒப்பந்தத்தை விரும்பவில்லை. ஆனால் தூதுவர்களுக்கு இளவரசி இஸபெல்லைக்கண்டதும் அவர்கள் எண்ணமே மாறிப் போயிற்று. இஸபெல் வயதுக்கு அதிகமான வளர்ச்சியோடும் உயரமாகவும் இருந்தாள். தங்கள் மன்னருக்கு எல்லா வகையிலும் ஏற்ற கம்பீரமான ராணிதான் இளவரசி இஸபெல் என்ற முடிவுக்கு வந்தார்கள். தூதுவர்களின் தலைவன் இளவரசியின் முன் மண்டியிட்டு, ''நான் உங்களுக்கு விசுவாசம் உள்ளவனாக இருப்பேன். நீங்கள் எங்கள் தலைவியாகவும் ராணியாகவும் வரவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான்.

'' ஆண்டவனுக்கும், அரசரான என் தந்தைக்கும் இது மகிழ்ச்சி அளிக்குமானால் நான் இங்கிலாந்தின் ராணியாக வருகிறேன்'' என்றாள் இஸபெல். இளவரசியின் சம்மதம் கிடைத்த மகிழ்ச்சியோடு திரும்பியது தூதுக் குழு.

ஆனால் இஸபெல் உடனே இங்கிலாந்துக்குப் போய்விடவில்லை. அவள் தன் வருங்காலக் கணவனைச் சந்திக்க ஓர் ஆண்டு காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த ஓர் ஆண்டும் திருமண ஏற்பாடுகளுக்காகத்தான். அவளுக்கு அழகான ஆடைகள் தயாரிக்கவும் ஒரு ராணிக்கு என்னென்னவெல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்பதைப் போதிப்பதற்குமே இந்த இடைவெளி. பிரஞ்சு இளவரசியான அவள் இங்கிலாந்தின் ராணியாகப் போகிறாளே, ஆகவே அவளுக்கு



ஆங்கில மொழிப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளெல்லாம் அலுப்பையும் வெறுப்பையுமே அளித்தன இஸபெல்லுக்கு.

அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் வந்தது. இங்கிலாந்து நாட்டு மன்னன் தன் வருங்கால மனைவியைச் சந்திக்கப் பிரான்சுக்கு வருகை தந்தான். ரிச்சர்டு தன்னுடன் ஏராளமான நண்பர்களையும் பிரபுக்களையும் வீரர்களையும் அழைத்து வந்திருந்தான். பிரான்ஸ் நாட்டிலே ஒரு பரந்த சமவெளியிலே இரண்டு மன்னர்களும் சந்திப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தச் சந்திப்பு மகத்தான கோலாகலக் காட்சியாக இருந்தது. அந்தப் பெரிய பிராந்தியம் முழுதும் ஏராளமான கூடாரங்கள் நிறுவப்பட்டிருந்தன. நூற்றுக்கணக்கான குதிரை வீரர்கள் வண்ண வண்ண ஆடைகளில் வரிசை கட்டி நின்றார்கள். நூற்றுக்கணக்கான தளபதிகள் உருவிய வாளுடன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்கள். சூரிய ஒளிபட்டு அவர்களின் வாள்கள் ஜ்வலித்துக் கொண்டிருந்தன.



தங்கள் கூடாரங்களிலிருந்து மன்னர் இருவரும் வெளிப்பட்டு ஒருவரை ஒருவர் வரவேற்க முன்னேறினார்கள். அப்போது வாளேந்திய தளபதிகள் முழந்தாளிட்டு வணங்கினார்கள். மன்னர்கள் இருவரும் கைகுலுக்கிக் கொண்டதும் ஃபிரான்ஸ் நாட்டு மன்னர் தம் கூடாரத்துக்கு ரிச்சர்டை அழைத்துக் கொண்டு போனார்.

ஆர்லியன்ஸ் பிரபு மணப் பெண்ணையும் அவள் பரிவாரங்களையும் அழைத்து வரப் போயிருந்தார். மன்னர்களின் சந்திப்பு நிகழ்ந்த அன்று மணப் பெண் வந்து சேரவில்லை. மறுநாள் தான் இஸபெல் வருகை தந்தாள். இஸபெல்லின் பணிப் பெண்களும் தோழிகளும் வண்டிகளில் வந்தார்கள். ஆனால் இஸபெல் வெல்வெட்டும் தங்க ரேக்கும் கொண்டு அலங்கரிக்கப்பட்ட அழகிய குதிரை மீதுதான் தன் பயணத்தை மேற்கொண்டாள். அது ஒரு நீண்ட அலுப்புத் தரக்கூடிய பிரயாணம். மைதானத்தை அடைந்த போது இஸபெல் மிகவும் சோர்ந்து காணப்பட்டாள். பீதியும் குழப்பமும் இதயத்தைக் கவ்விய நிலையில் பல ஜோடிக் கண்கள், தன்னையே மொய்ப்பதை உணர்ந்தாள். இங்குள்ள ஏதோ ஒரு கூடாரத்தில் கிழவரும், கடுகடுப்பான சுபாவம் உடையவரும், எனக்குக் கணவனாகப் போகும் ஒருவர் உட்கார்ந்து கொண்டிருப்பார். இந்த என் தாயகத்தை விட்டு அவரோடு நான் புதியதொரு நாட்டுக்கு வாழப் போக வேண்டும்'—இப்படியெல்லாம் எண்ணமிட்டபடியே முன்னேறிக் கொண்டிருந்தாள் இளவரசி இஸபெல்.

களைத்த நிலையிலும், கலங்கிய மனத்திலும்கூட அங்கிருந்த எல்லாரையும்விட அழகாக விளங்கினாள் இஸபெல். முகத்தில் புன்னகையையும் உள்ளத்தில் துணிவையும் மலரவிட்டபடி குதிரையிலிருந்து இறங்கினாள். ரிச்சர்டு மன்னன் அமர்ந்திருந்த கூடாரத்தினுள் நுழைந்தாள். குனிந்த தலையுடன் இரு முறை தன்னை மணக்கப் போகும் மன்னன் முன்னால் மண்டியிட்டு எழுந்தாள்.

தன் சின்னஞ் சிறு மனைவியை அன்போடு பார்த்தான் ரிச்சர்டு. இரண்டாவது தடவை அவள் மண்டியிட்டபோது அவன் எழுந்து சென்று அவள் கரம் பற்றித் தன் அருகே அழைத்து மிருதுவாக முத்தமிட்டான். இஸபெல் முதல் முறையாகத் தலை நிமிர்ந்து தனக்குக் கணவனாக வரப் போகிறவனைப் பார்த்தாள். அவளுக்கு வியப்பான வியப்பு! அவள் கற்பனை செய்திருந்தபடி அவன் கிழவனல்ல. சிடுமூஞ்சிக்காரனுமில்லை. இளமையும் அழகும் அன்பு ததும்பும் பார்வையுமாக...!

அந்த வினாடியே இஸபெல் முடிவு செய்து கொண்டாள். இனிமையாகச் சிரிக்கும் இந்தப் பெரிய கணவனிடம் நாமும் அன்பு காட்ட வேண்டும். அவள் படித்த, கேட்ட கதைகளில் வரும் கதாநாயகனாகவே தோற்றம் அளித்தான் ரிச்சர்டு. இஸபெல் பூரித்துப் போனாள்.

ஆனால் உண்மையில் ரிச்சர்டு அப்படிப்பட்டவன் இல்லை. அவளிடம் மட்டுமே அவன் அன்பாகவும் பாசமாகவும் இருந்தானே தவிர மற்றபடி அவன் முற்றிலும் மாறுபட்ட மனிதன்.

இந்தச் சந்திப்புக்குச் சில நாட்களுக்குப் பிறகு இஸபெல் கடல் கடந்து இங்கிலாந்துக்குப் போனாள். அங்கு எல்லாமே அவளுக்குப் புதுமையாக இருந்தன. முதலில் கென்ட்டில் உள்ள எல்தாம் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள், ஓய்வு எடுத்துக் கொள்ள. வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில்தான் முடிசூட்டு விழா. தங்கள் ராணியை மக்கள் பார்ப்பதற்காக அந்த நெடுந் தூரப் பிரயாணத்தை ஒரு வெள்ளைக் குதிரை மீது மேற்கொண்டாள் இஸபெல். அவள் ஃபிரெஞ்சுக்காரி என்பதால் அவளை அவர்கள் வெறுத்



பழக்கினால் பேசக்கூடிய ஆற்றல் கிளிகளுக்கும் மைனாக்களுக்குமே உண்டு. கிளிகளில் எத்தனையோ வகைகள். காட்சிசாலைகளில் நீங்கள் காணும் பெரிய உருவிலுள்ள கிளி பஞ்சவர்ணக் கிளியல்ல. இதன் பெயர் மக்கா. இது நம் நாட்டுப் பறவையுமல்ல. தென் அமெரிக்காவைச் சேர்ந்த பறவை இது. நம் நாட்டில் காணப்படும் பஞ்சவர்ணக் கிளிக்குப் பாராகீட் என்று பெயர். இது பச்சைக்கிளியை விட சற்றுச் சிறியதாக, ஊதா நிறத் தலையும் மஞ்சள் முனை கொண்ட நீள வாலும் பச்சை உடலும் சிவப்புத் தோள்பட்டைகளும் பழுப்பு மஞ்சள் அலகுமாக இருக்கும். தமிழ்நாட்டின் தெற்குமலைச் சாரல்களில் ஒரு வகைக் கிளிகள் வாழ்கின்றன. இவற்றுக்குக் கன்னிக் கிளி என்று பெயர். இச் சிறு கிளிகள் இரவில் மரக் கொம்புகளிலிருந்து தலைகீழாகத் தொங்கியபடி தூங்கும்.

கிளியுடன் பேசும் பிள்ளை யாரோ!

வண்ணப்படம்: ஆர். ஹரிகோபால்

தார்கள் என்பது இளவரசிக்குத் தெரியாது. அந்த அழகிய முகத்தையும் புது மலர் போன்ற புன்னகையையும் கண்ட ஆங்கில மக்கள் வெறுப்பை உதறிவிட்டுத் தங்கள் அழகு ராணியிடம் அன்பு கொள்ளலானார்கள். அப்படி அவர்களை மயக்கி விட்டது இஸபெல்லின் வனப்பு.

முடிசூட்டு விழாவுக்குப் பிறகு விருந்தும் கேளிக்கையும் பல நாட்களுக்குத் தொடர்ந்தன. சின்னப் பெண்ணான இஸபெல் ரொம்பவும் களைத்துப் போனாள். இந்தக் கோலாகலத்தை அடுத்து வந்த அமைதியான நாட்களை இஸபெல் மிகவும் விரும்பினாள். கணவனோடு பகல் வேளைகளில் வேட்டையாடப் போனாள். மாலை நேரங்களை அவனோடு விளையாடியும் புத்தகங்களைப் படித்தும் பொழுது போக்கினாள். இந்த மகிழ்ச்சியான நாட்கள் அதிக காலம் நீடிக்கவில்லை. ரிச்சர்டு இஸபெல்லிடம் எப்போதும் அன்பாகப் பழகினான். உலகிலேயே மிகச் சிறந்த கணவன் இவன்தான் என்று எண்ணி மகிழ்ந்தாள் இஸபெல், பாவம்.

ஆனால் மற்றவர்கள் அப்படி நினைக்கவில்லை. மன்னன் ரிச்சர்டை நாளுக்கு நாள் மக்கள் அதிகமாக வெறுக்கலானார்கள். அத்தகைய காரியங்களைச் செய்தான் ரிச்சர்டு. மக்கள் மன்னரை வெறுப்பதையோ, மன்னர் தவறான முறையில் ஆட்சி செய்வதையோ சின்ன ராணி அறியவில்லை.

ஒரு நாள் ரிச்சர்டு இஸபெல்லிடம் தான் அவளைப் பிரிந்து அயர்லாந்துக்குப் போகப் போவதாகக் கூறினான். இஸபெல் அழுதாள். தன்னையும் உடன் அழைத்துப் போகும்படி கெஞ்சினாள். ஆனால் ரிச்சர்டு வருத்தத்துடன் மறுத்து விட்டான். சின்னப் பெண்ணான அவளுக்கு அந்தப் பிரயாணம் ஏற்றதில்லை என்று கூறினான்.

பிரிய வேண்டிய வேளையில் விடை பெறும்போது தனது சின்னஞ்சிறு மனைவியை அன்போடு அணைத்து முத்தமிட்டான் ரிச்சர்டு. இஸபெல் கண்ணீர் விடவில்லை. மனத்தைக் கல்லாக்கிக்கொண்ட அவள், முகம் வெளுக்க அமைதியாகச் சோகமே வடிவாகக் கணவனை அணைத்துக் கொண்டாள். ரிச்சர்டு மெள்ள அவளிடமிருந்து விடுபட்டுக் குதிரை ஏறி மறைந்தான். கணவன் பார்வையிலிருந்து மறைந்த பிறகுதான் அவள் கண்கள் மடை திறந்த வெள்ளமாகப் பெருக்கெடுத்தன. தான் இனி தன் கணவனை என்றென்றும் பார்க்கப் போவதில்லை என்ற பயங்கர உண்மையைப் பாவம் இஸபெல் அப்போது அறிந்திருக்கவில்லை.

மக்களின் வெறுப்பு விசுவரூபமெடுத்து ரிச்சர்டைக் கைதியாக்கி லண்டன் டவரில் சிறைப்படுத்தியது. லங்காஸ்டர் கோமகனான ஹென்றி அழைக்கப்பட்டான், மன்னனாக முடிசூட்டிக் கொள்ள.

இந்த நிலையிலும்கூட இஸபெல்லுக்குத் தன் கணவன் கைதியாக டவரில் அடைபட்டிருக்கிறான் என்பது தெரியாது. அவனைப் பற்றிய எவ்விதத் தகவலும் அவளுக்குத் தெரிவிக்கப்படவில்லை. சிறைப்பட்ட மன்னனைப் பற்றி யாரும் அவளுக்கு ஏதும் சொல்லக் கூடாது என்றும் கட்டளையிடப்பட்டிருந்தது.

விண்ட்ஸரில் உள்ள யார்க் கோமகனுக்குச் செய்தி தெரிந்தது. ராணி இஸபெல்லைப் பாதுகாக்கும் பொறுப்பு அவரிடம் விடப்பட்டது. நல்ல இதயம் படைத்த அவர், கெண்ட்டில் உள்ள கோட்டைக்கு இஸபெல்லைக் கொண்டு போனால் அங்கிருந்து அவளது தாயகமான ஃபிரான்ஸுக்குத் தப்பிச் செல்லுவது சுலபமாக இருக்கலாம் என்று உணர்ந்தார். அதன்படியே இஸபெல் ரகசியமாகக் கோட்டைக்குக் கொண்டு

போகப்பட்டான். அவளது பிரஞ்சுப் பணிப் பெண்களும் தோழிகளும் விண்ட்ஸரிலேயே விடப்பட்டனர். பாவம் இஸபெல்! தனிமை அவளைப் பீதி கொள்ளச் செய்தது. கணவன் இல்லை, உற்ற தோழிகள் இல்லை. சுற்றிலும் பழக்கமில்லாத ஆங்கிலப் பணிப் பெண்கள். கணவனைப் பற்றிய தகவலே இல்லை. 'அவர் எங்கே போனார்?' ஆச்சரியப்பட்டாள் இஸபெல். 'ஏன் எனக்கு ஒரு செய்தியும் அனுப்பவில்லை?' குமைந்து போனாள் குழந்தை இஸபெல்.

இதன் பிறகு இஸபெல்லை ஒவ்வோர் இடமாக மாற்றிக் கொண்டே இருந்தார்கள். எங்கு போனாலும் 'இங்கு நான் என் கணவனைச் சந்திப்பேன்' என்று நம்பினாள். ஆனால் அவள் நம்பிக்கை நனவாகவே இல்லை. இதே போல் ரிச்சர்டையும் சிறைச் சாலைகளில் இடம் மாற்றிக் கொண்டே இருந்தார்கள். முடிவாக பார்க்டியர் கோட்டையில் அவன் இறந்தான். எப்படி என்பது யாருக்கும் தெரியாது.

கணவன் இறந்த செய்தி கூட மனைவி இஸபெல்லுக்கு அறிவிக்கப்படவில்லை. கணவனைச் சந்திப்போம் என்ற நம்பிக்கையிலே இருந்தவளுக்கு அவன் இறந்து பல வாரங்கள் கழித்தே அது அறிவிக்கப்பட்டது.

புதிய மன்னன் ஹென்றி இஸபெல் இங்கிலாந்திலேயே இருக்க வேண்டும் என்று விரும்பினான். தன் மகனுக்கு அவளை மனைவியாக்கிக் கொள்ளுவதாகக் கூறினான். ஆனால் இஸபெல் தன்னைத் தன் தாய்நாட்டுக்கு அனுப்பி வைத்து விடும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். கடைசியில் அவள் விருப்பத்துக்கு இணங்கி அவளைப் ஃபிரான்சுக்கு அனுப்பி வைத்தான் புதிய மன்னன் ஹென்றி.

ஏழு வயதில் எழில் வடிவாக மகிழ்ச்சி நிறைந்தவளாக, செல்வச் செழிப்புடன் இங்கிலாந்துக்கு வந்தாள் இஸபெல். பன்னிரண்டாவது வயதில் கணவனை இழந்து, வேதனையும் விரக்தியும் நிறைந்தவளாக எல்லாம் இழந்த நிலையில், தனிமையும் சோகமுமே துணையாகப் பிரான்ஸ் தேசத்திலேயே இவளைவிடப் பரிதாபமான ஜீவன் இல்லை என்று கூறும்படியாகத் தன் தாயகமான ஃபிரான்ஸுக்குத் திரும்பினாள் குழந்தை ராணி இஸபெல். அழகி இஸபெல்லின் வாழ்க்கையை அரசியல் அவலமாக்கிவிட்ட கதை இது.

அடுத்த இதழில்: எமிலி



1. பானையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் இது என்ன சிலை தெரியுமா !



2. மொகலாய மன்னர் ஷாஜஹான் தமது நாற்பத்தி எட்டாவது பிறந்த நாளை எப்படிக் கொண்டாடினுர் என்று தெரியுமா ?


3. காதில்தான் பெரிய வளையங்களை அணியாக மாட்டிக் கொள்ளுவார்கள். இந்தப் பெண் கன்னத்தில் இப்படி வளையம் மாட்டிக் கொண்டிருக்கிறளே. இந்தப் பழக்கம் எங்கே, எதற்காகத் தெரியுமா ?



4. ஐயோ பாவம்! இந்த அழகான பறவையை யாரோ அடித்துப் போட்டிருக்கிறர்கள் போலிருக்கிறதே. பார்த்தால் பரிதாபமாக இல்லை ?



5. இது என்ன கோமாளித் தலையலங்காரம்? எந்தத் தேசத்து மக்கள் இப்படி ஒரு குல்லாவை அணிந்துள்ளார்கள் தெரியுமா ?



விடைகள்

(1) புராதன கிரேக்க மதுக்கோப்பை இது. அதன் விசேஷம், மதுவை அதிகமாகச் சுவைத்துக் குடிப்பதைத் தடுக்கும் வகையில் இது அமைக்கப்பட்டிருப்பதுதான். இதில் மதுவை நிரப்ப மிகச் சிறிய துவாரமே இருக்கும். இக்கோப்பையில் இதன் மூலம் மதுவை நிரப்ப ஆறுமணி நேரமாகும்.

(2) தமது சாம்ராஜ்யத்தில் உயர்குடியில் பிறந்த அந்தணர்களுக்கு ஒன்பது விதமான தானங்களை அளித்துக் கொண்டாடினுர். அவை என்ன தானங்கள் தெரியுமா? தமது எடைக்கு நிகரான நவரத்தினங்கள், தங்கம், வெள்ளி, பட்டாடைகள், பருத்தி ஆடைகள், வாசனைப் பொருட்கள், கோதுமை மாவு, வெண்ணெய், தானியங்கள் ஆகியவையே இந்த ஒன்பதாகும்.

(3) திமோசஸ் பகுதிகளில் வாழும் பல்வேறு இனத்துப் பெண்கள் ஏழு குழந்தைகளுக்குத் தாயானால் இப்படிக் கன்னத்தில் வளையம் மாட்டிக் கொள்ளுவார்களாம்.

(4) பரிதாபப்பட வேண்டாம். அந்தப் பறவையின் பெயர் ராபின். அது தனக்கு ஆபத்து என்று உணரும்போது இப்படித்தான் இறந்து போனது போலப் பாசாங்கு செய்து கிடக்கும். அபாயம் அகன்றதும் தானே நிமிர்ந்து, பறந்து போய்விடும் !

(5) கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள டபோஸா இனத்துத் தலைவர், மண்டையோடும் மான் கொம்பையும் இணைந்துத் தயாரிக்கப்பட்ட தலையலங்காரத்தை அணிந்துக் கொள்ளுவார்.



2

இமயமலை அடிவாரத்திலே எத்தனையோ சாம்ராஜ்யங்கள் தோன்றி, வளர்ந்து, அழிந்திருக்கின்றன. கடவுளின் அருளும் ஆசியும் பெற்ற அரசர்களெல்லாம் தோன்றி யிருக்கிறார்கள் அங்கே. வல்லமை பெற்ற வீரர்கள், தேவதைகளின் பிரதிநிதிகள், தவத்தினால் எதையும் சாதிக்கும் ஆற்றல் பெற்றோர் பலர் வாழ்ந்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் **பராக்கிரம கேது**. ஆழ்ந்த அறிவும் அஞ்சாநெஞ்சமும் அதிபராக்கிரமும் கொண்ட அரசராக விளங்கினார். நீதியும் நேர்மையும் கொண்டிருந்த பராக்கிரமரைக் கடவுளின் அவதாரமாகவே மக்கள் நம்பினார்கள். அதற்கான வல்லமை அவரிடம் இருந்தது. இவருக்கு அழகே வடிவான ஒரு தங்கை. **பிரியா** என்று பெயர். பாசமே உருவான ஒரு தம்பி. **சத்ருக்னன்** என்று பெயர். எழிலுக்கு ஓர் இலக்கணமாக விளங்கினாள் பிரியா. பாசத்தின் மறு உருவாகத் திகழ்ந்தான் சத்ருக்னன்... தம் உடன்பிறந்தோரிடம் உயிரையே வைத்திருந்தார் மன்னர் பராக்கிரமர்.

தம்பியுடையோன் படைக்கஞ்சான் என்ற பழமொழிக்கு ஏற்பப் பராக்கிரமர் எந்தப் படையைக் கண்டும் அஞ்சியதில்லை. பராக்கிரமரின் பராக்கிரமத்தைக் கண்டே பகைவர் எல்லாம் அஞ்சி ஓடினார்கள். சாம்ராஜ்யம் பெருகியது. எதிர்த்து நிற்க யாரும் இல்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் சுகமான வாழ்க்கையைப் பற்றிய எண்ணமும் தலை தூக்கியது பராக்கிரமரிடம். இது நாள் வரை போர்க்களமே பொழுது போகும் இடமாக வாழ்ந்து விட்டவர் இப்போதுதான் தமது தகுதிக்கு ஏற்ப ஒரு தரமான அரண்மனையை உருவாக்க எண்ணினார்.

'இதுவரை யாருமே கண்டும் கேட்டுமிராத வகையில் அற்புதமான அமைப்பில் அந்த அரண்மனை இருக்க வேண்டும். என் படை பரிவாரங்களும், மந்திரி பிரதானிகள், பிரபுக்கள், அறிஞர்கள், கலைஞர்கள் அத்தனை பேர்களும் ஒரே இடத்தில் தங்கி இருக்குமளவுக்குப் பரந்ததாக இருக்க வேண்டும் அந்த இடம். இவ்வளவு பேர்களுக்கும் அவரவருக்கு ஏற்ற வகையில் அங்கு அரண்மனைகளை நிர்மாணிக்க வேண்டும். எல்லா அரண்மனைகளுக்கும் பிரதானமானதாக நடு நாயகமாக நான் தங்கும் அரண்மனை கோட்டைகளால் சூழப்பட்டுக் கம்பீரமாக விளங்க வேண்டும். இவ்வுலகின் அதிசயங்கள் எல்லாம் அதனுள் இருக்க வேண்டும்.'' தமது கற்பனை மாளிகையைப் பற்றிக் கூறிக் கொண்டே போனார். அவர் காலடியிலே கதை கேட்கும் குழந்தை போல் அமர்ந்திருந்தான் சத்ருக்னன். போர்க்களத்திலேதான் அவன் புலி. அண்ணாவின் அருகிலே அவன் அணில். அழகி பிரியா தமையனின் சிங்காதனத்தின் பின்னே தங்கக் கொடி போல் ஒயிலாக நின்று கொண்டிருந்தாள். இல்லை, இல்லை — அண்ணா உருவாக்கி நிறுத்திய அதிசயமான அரண்மனை என்ற கற்பனைக் குதிரை மீதேறிப் பறந்துகொண்டிருந்தாள். அந்த உத்தேச மாளிகையின் உப்பரிகையிலே நின்று கொண்டிருக்கிறாள் பிரியா. அவளது கருங்குழல். தென்றலிலே அலை அலையாகப் பறக்கின்றது. அப்போது எங்கிருந்தோ இனிய மணமும் கானமும் கலந்து வருகின்றன.




பிரியாவின் கற்பனை சத்ருக்னனின் குரலினால் கலைந்தது. "அது சரி அண்ணா, மகத்தானதோர் அரண்மனைக்கு மனத்தளவிலே பெரிய திட்டமெல்லாம் தீட்டிவிட்டீர்கள். அப்படியொரு கோட்டை கொத்தளங்களோடு மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் உருவாக்க எத்தனை காலமாகும்? உங்கள் எண்ணப்படி அதை உருவாக்கித் தரச் சிற்பிகள் எத்தனை பேர் வேண்டும், தெரியுமா?" என்று கேட்டான் தம்பி. பரந்த சாம்ராஜ்யாதிபதியான பராக்கிரமரும் அவர் உடன் பிறப்புக்களும் உட்கார்ந்திருந்ததோ ஒரு வெற்றுவெளியில்.

சிந்தனையிலே தோய்ந்திருந்த மன்னர், "உண்மைதான் தம்பி, என் எண்ணப்படியானதோர் அரச மாளிகையையும், குடியிருப்புக்களையும் உருவாக்க வெகு காலமாகும்தான். ஆனாலும் இறையருள் பெற்றவர்களால் நினைத்த மாத்திரத்தில் உருவாக்கித் தந்துவிட முடியும். தேவர்களின் சிற்பியான மயன் இமைக்கும் நேரத்தில் எதையும் சிருஷ்டி செய்யும் வல்லமை பெற்றவனாம். அப்படி ஏதோ ஒரு சக்தி இந்தக் கற்பனை மாளிகையை உருவாக்கித் தர உதவப் போகிறது என்று என் உள் மனம் கூறுகிறது" என்றார்.

பராக்கிரமர் பேசி வாய்மூடுமுன் வானத்திலே பளீர் என்று ஓர் ஒளி மின்வெட்டென தெளிந்தது. மலைச் சுவர்களெல்லாம் அதிரும்படியாக, ஓர் ஓசை எழுந்தது — பெரும் பாறைகள் இடம் பெயர்ந்து உருண்டு சரிவது போல. மன்னர் தம் இருக்கையிலிருந்து திடுக்கிட்டு எழுந்தார். மற்றையோரும் அதே அதிர்ச்சிக்கு ஆளானார்கள். அப்போது ஆகாயத்துக்கும் பூமிக்குமாக இரண்டு பிரும்மாண்டமான உருவங்கள் மன்னரின் முன்னே நின்றன. மார்பு மீது கைகளை மடக்கிக் கட்டிக் கொண்டு நின்றன அவ்விரு உருவங்களும். கம்பீரமான குரலிலே ஓர் உருவம் பேசியது. "சற்று முன்பு தேவ சிற்பி மயனைப் பற்றிக் கூறினீர்களே, அந்த மயனைவிடத் திறமைசாலிகள் நாங்கள். என் பெயர் **சீதளன்**. என்னைப் பனியரசன் என்பார்கள். இவன் என் தம்பி **பிங்களன்**. நீர் விரும்பியபடியான புதிய ராஜ மாளிகையை எங்களால் நிர்மாணித்துத் தர முடியும். வானுலகவாசிகள் எல்லாம் உம் வல்லமையையும் நேர்மையையும் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட உமக்கு உதவ விரும்புகிறோம். உம் கற்பனையில் உள்ள மாட மாளிகைகளையும் கோட்டை கொத்தளங்களையும் ஒரே இரவுக்குள் நிர்மாணித்துத் தர முடியும் எங்களால்" என்றது அந்தப் பூதாகாரமான உருவம்.

பராக்கிரமருக்கு ஏற்பட்ட பரவசத்துக்கு அளவே இல்லை. அவர் நம்பிக்கை நனவாகும் வேளை வந்து விட்டது. அதுவும் எவ்வளவு எளிதாக? வியப்பும் மகிழ்ச்சியும் அவரைக் கொஞ்ச நேரத்துக்குப் பேச முடியாத நிலைக்கு அழுத்தியது. பிறகு ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "பனியரசனே! உன் உதவிக்குப் பிரதியாக என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

"உமது தங்கை பிரியாவை எங்களுக்கு அளித்து விடவேண்டும்" என்றார்கள் சீதளனும் பிங்களனும்.

பராக்கிரமரின் உயிருக்குயிரானவள் பிரியா. அவளைப் பரிசாகக் கேட்டதும் பதறிப் போனார் மன்னர். முடியாது





என்று மறுக்க முயன்றபோது தம்பி சத்ருக்னன் அவர் காதோடு கூறினான்: ''அண்ணா, மறுக்காதீர்கள். இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கிய உங்களுக்குக் கௌரவமானதோர் அரண்மனை வேண்டாமா? பணிந்துவிட்ட பகைவர்கள் பயந்தே இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? பாதுகாப்பாகக் கோட்டை கொத்தளம் மதில்கள் வேண்டாமா? இத்தனையும் ஓர் இரவில் உண்டாக்கித் தருகிறேன் என்று வலிய வந்துள்ளார்கள். இந்த வாய்ப்பை இழக்க வேண்டாம். நிபந்தனையை ஏற்றுக்கொள்வோம். கோட்டையும் அரண்மனைகளும் எழும்பியான பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' என்றான். காரியம் முடிந்த பின் கையை விரித்து விடலாம் என்பது சத்ருக்னனின் எண்ணம். சிதள-பிங்களர்களின் திறமையை அறியாதவன் அவன். தம்பியின் ஆலோசனைகளில் அளவிலா நம்பிக்கையுடைய மன்னர் பராக்கிரமர் மனத்துக்குள் சிரித்துக் கொண்டே அந்த அபூர்வ சகோதரர்களிடம் ''அப்படியே ஆகட்டும். என் கற்பனையில் உள்ள ராஜ கிருஹத்தை நிர்மாணித்துக்கொடுங்கள். எனது தலைநகரைப் போன்றதோர் நகரம் இத்தரணியிலே கிடையாது என்று உலகோர் கூறுமளவுக்கு அது இருக்க வேண்டும்'' என்றார். அந்தப் பூத சகோதரர்களும் மௌனமாகத் தலையசைத்து விட்டு மறைந்தனர்.

அரச குடும்பத்தினர் அன்றிரவு உறங்கவே இல்லை. மறுநாள் காலை மாய சக்தியினால் உருவாகி நிற்கும் உன்னதமான மாட மாளிகைகளையும் கோட்டை கொத்தளங்களையும் பற்றியே எண்ணமிட்டபடி உறக்கம் கொள்ளாமல் உழன்று கொண்டிருந்தார்கள். 'என்ன நடக்கும்? இரவுக்குள் அத்தனை பெரிய நகரை அவ்விருவரும் எப்படி நிர்மாணிப்பார்கள்?' வினாக்களை எழுப்பியபடி விழித்திருந்தனர், விடியலைக் கண்கூடாகக் காணும் ஆவலுடன்.

அந்த இரவு... கரேலென்று இருள் அப்பிக் கிடந்தது எங்கும். இடையிடையே பளீர் பளீர் என்று மின்னல்கள் வெட்டிச் சிரித்தன. மலைகளை உருட்டிப் புரட்டும் ஒலி. சூற்றுளிகளின் ஓசை, பாறையோடு பாறை மோதும் ஒலி. இப்படி எத்தனையோ விநோதமான சப்தங்கள். மாய நகரத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள் போலும் அந்த அபூர்வ சகோதரர்கள்.

தொலையாப் பெரும் போதாக வளர்ந்து கொண்டிருந்த இரவும் தேய்ந்தது. பளீரென்று கீழ் வானில் தன் ஒளிக் கரங்களை உயர்த்திக்கொண்டு எழுந்தான் சூரியன். ஓடோடி வெளியே வந்தார்கள், ராஜ குடும்பத்தினர். 'ஆஹா... அற்புதம்! அபாரம்... ஆச்சரியம்!'' என்ற வார்த்தைகளுக்கு மேல் யாராலும் பேச முடியவில்லை. பராக்கிரமருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. அவர் கற்பனையை அப்படியே நிஜமாக்கி யிருந்தார்கள். எத்தனையோ பொலிவுடன் சூரிய ஒளியில் மினுக்கிக் கொண்டு நின்றன கூட கோபுரங்களும் மாட மாளிகைகளும். மலைகளை எத்தனையோ விதமாக மாற்றி அமைத்து, அரண் சூழ்ந்த அழகிய நகரமாக்கியிருந்தார்கள். மன்னர் மாளிகை தனியாக ஒரு குன்றிலே கம்பீரமாகத் தகதகத்துக் கொண்டிருந்தது. அதற்குள் போக ஒரே ஒரு பாதை. அடுத்திருந்த ஒரு குன்றிலிருந்து தொங்கு பாலம் மூலம் இணைக்கப் பட்டிருந்தது அது.

நீலநகரின் ஒவ்வொரு பகுதிக்கும் ஓடி ஓடிப் போய்ப் பார்த்து மகிழ்ந்து போனார் பராக்கிரமரும் சத்ருக்னனும். விநாடிக்கு விநாடி மகிழ்ச்சி மறைந்து வேதனை அதிகமாகிக் கொண்டிருந்தது. ஏன்? அருமைத் தங்கை பிரியாவைப் பிரிய வேண்டுமே என்ற வேதனை தான். அது பூதாகாரமாக உருவெடுத்த நிலையில் பூதாகாரமாகச் சீதளனும் பிங்களனும் எதிரில் நின்றார்கள். வாக்களித்தபடி அவர்களுக்குப் பிரியாவைத் தரவேண்டிய வேளை நெருங்கியதும் ''என் தங்கையை உங்களுக்கு மனைவியாக்கித் தர முடியாது'' என்றார் பராக்கிரமர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றாதது எத்தனை பெரிய தவறு என்பதைச் சகோதரி பாசம் மறைத்துவிட்டது. இதுநாள்வரை நீதிக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவராக விளங்கிய மன்னரை ஒரு விநாடியில் பாசம் நீதி தவறச் செய்து விட்டது. ''பிரியா எங்கள் உயிர். அவளைப் பிரிந்து இந்த அற்புத நகரில் வாழ்ந்து என்ன பயன்? இவளைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் தருகிறேன்..''


''எங்களுக்கு வேறு எதுவும் தேவையில்லை. ஒப்பந்தப்படி அவள் இப்போது எங்கள் உடைமையாகி விட்டாள். நீங்களாகத் தராவிட்டால் அவளைப் பறித்துச் செல்வது அப்படியொன்றும் சிரமமான காரியமல்ல'' என்றான் பிங்களன்.

'' பிரியாவை விட அபூர்வமானதொரு பொருள் இருக்கிறது. தங்க நதியின் நடுவே ஒரு பாறை மீது சொக்கத் தங்கம் இருக்கிறது. அதை யார் அடைகிறார்களோ அவர்களுக்கு இவ்வையத்தையே ஆளும் வல்லமை கிடைக்கும். அந்தத் தங்கத்தைக் குண்டோதரன் என்ற குள்ளன் கவர்ந்து போய் விட்டான். அதிலிருந்து அவன் ஓர் அற்புதமான மோதிரத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறான். அந்த மோதிரத்தினால் ஆகாதது எதுவுமில்லை. ஆகவே நீங்கள் அந்த மோதிரத்தை உங்களுடைய தாக்கிக் கொண்டீர்களானால்...''

சத்ருக்னன் தன் பேச்சை முடிக்கு முன்பே சீதளன் பிரியாவைப் பொம்மை போலத் தூக்கிக் கொண்டான். ''மாய மோதிரத்தைப் பற்றிய தகவலைக் கூறியதற்கு மிக்க நன்றி. குண்டோதரனிடமிருந்து அம்மோதிரத்தைப் பெற்று எங்களுக்குக் கொடுத்து விட்டு உங்கள் சகோதரியை விடுவித்துக் கொள்ளுங்கள். அதுவரை அழகி பிரியா எங்களுடனேயே இருப்பாள்'' என்று கூறிப் பிரியாவுடன் அவ்விருவரும் மறைந்து போனார்கள்.


பிரியா மறைந்த அந்தக் கணமே அந்தப் பிரதேசம் சோகத்தில் ஆழ்ந்தது. அன்பு அழகு. ஆசை இவற்றின் சின்னமாக விளங்கியவள் இளவரசி பிரியா. அவள் இல்லாதபோது நாடே களை இழந்தது. எல்லார் மனத்திலும் சோகம் கப்பிக் கொண்டது. அது மட்டுமல்ல. பனி அரசனான சீதளனிடம் வாக்குத் தவறி நடந்து கொண்டதினால் புதிய நகர் பனியின் கோரப் பிடியிலே சிக்குண்டது. மலர்கள், பழங்கள், தளிர்கள் எல்லாம் கருகிக் கீழே உதிர்ந்தன. எங்கும் பனி, குளிர். கதகதப்பே இல்லாததினால் மக்கள் தாங்க முடியாத தொல்லைகளுக்குள்ளானார்கள். பொலிவோடு தோன்றிய புதிய நகரம் களை இழந்து சோகமே உருவாக நின்றது. (தொடரும்)


நந்து சுந்து மந்து 11
கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்
நந்து சுந்துவோடு வேட்டைக்குப் போயவர்களைச் சோர்வும் களைப்பும் ஓர் இடத்தில் உட்கார வைத்து விடுகிறது.
உஸ், அப்பாடா! என்னாலே இனிமே ஒரு அடி கூட நடக்க முடியாது. அவங்களுக்கென்ன துப்பாக்கியைத் தூக்கிட்டு வேகமாப் போயிடுறாங்க. இந்த வாத்துக்களைச் சுமந்து கொண்டு நடந்து பாத்தாலில்ல தெரியும்?
யம்மாடி! கரடிக்கு இவ்வளவு பலமா? உருவமும் பயங்கரமாத்தான் இருக்கு. காட்டு வாத்துக்கள் இந்தக் கரடியோட வயித்துக்குள்ளே போயிடும் போலேருக்கு.
அந்தக் கரடிகிட்டேருந்து தப்பி வந்ததே தம்பிரான் புண்ணியம். அது தெரியாம வாத்துப் பறி போனதுக்காக என்னெ இப்படி விரட்டியடிச்சா நான் என்ன பண்ணுவேன்?
அடிக்குத் தப்பி ஒரு மரத்திடம் தஞ்சமடைய எண்ணி ஏறிய போது—
இந்தப் பெரிய மரத்திலே ஏறி உட்கார்ந்துடறேன். அவங்க என்னைக் காணாமல் தேடித் தவிக்கட்டும்.
யப்பா! இன்னிக்குப் பொழுது விடிஞ்சதிலேருந்து ஒரே அடியும் உதையுமா இருக்கே...
கரடியினால் தள்ளப்பட்டு நாற்றமெடுத்த சதுப்பு நிலக் குட்டையில் விழுந்து வெளியேறி வருகிறது மந்து.
அப்போ என்னை விரட்டினாங்க, இப்போ என்னைக் கண்டு ஏன் இப்படி ஓடறாங்க?
போ... போ... கிட்டே வராதே! குடலைப் பிடுங்குது நாத்தம்...


எங்கேயோ போய் விழுந்துட்டு வந்திருக்கான். முதல்லே இவனைக் குளிப்பாட்டியாகணும்.
குளிக்க வாடான்னு வரமாட்டான் இப்போ. சுடுதண்ணீர்க் குளியல் சுகமா இருக்கும் பயலுக்கு.
குளிர்ப் பிரதேசங்களில் எப்போதும் சுடு நீர்த் தேவை இருக்கும். ஆகவே பெரிய தொட்டிகளைக் கட்டி அதன் அடியில் காளவாய் அடுப்புகளை அமைத்திருப்பார்கள்.
ஐயையோ! இந்தக் கரடி என்னை விடாமல் துரத்திக்கிட்டு வருதே. அவங்க கூடப் பயந்து ஓடிட்டாங்க.
ஆனந்தமாத் தொட்டித் தண்ணிலே படுத்துக் கிட்டியா? உனக்குக் குளு குளுக் குளியலா வேணும்? இரு... இரு...
இன்னும் கொஞ்ச நேரத்திலே தண்ணி தீ: தீன்னு மாறும். இப்போ ஆனந்தமாத் தண்ணிலே படுத்துக் கிடக்கும் நீ அப்போ என்னமா ஆடறதைப் பார்க்கலாம்.
எரா... எரா... ஐயோ... எரியுதே...
ஏன் வெர்..கிர் ஜிலு ஜிலுன்னு இல்லியா? பூதாகாரமா எத்தனை பெரிய உடம்பு... எவ்வளவு பெரிய வாய்!
நம்ம மந்துவோட யோசனையே யோசனை. அந்த முரட்டுக் கரடியை என்னமா ஓட வைச்சுட்டான்.
உடம்பு எரிச்சலைத் தணிச்சுக்க அது ஏரியைத் தேடி ஓடும். இனிமே இந்தப் பக்கமே தலைகாட்டாது.
தொடரும்

சுண்டெலிக்கும் சுண்டெலிக்கும் சண்டை வந்ததாம்!

• அழகு பழனிச்சாமி •



சுண்டெ லிக்கும் சுண்டெ லிக்கும்
சண்டை வந்ததாம்! — அவை
சும்மா சும்மா பொந்துக் குள்ளே
சப்தம் போட்டதாம்!

அண்ணன் எலியோ தம்பி எலியை
அடித்து விட்டதாம்! — பின்னர்
அதனால் மூண்ட சின்னச் சண்டை
அதிகம் ஆச்சுதாம்!

சண்டைச் சத்தம் கேட்டு எலியின்
அம்மா வந்ததாம்! — அது
''சப்தம் வேண்டாம்!'' என்று சொல்லி
அடக்கிப் பார்த்ததாம்!

என்ன வார்த்தை சொன்ன போதும்
கேட்க வில்லையாம்! — எலிகள்
எதிர்த்துப் பேசும் சண்டை யைத்தான்
நிறுத்த வில்லையாம்!

சொல்லச் சொல்ல அண்ணன் எலியோ
வம்பு செய்ததாம்! — அது
சின்ன எலியின் காதைப் பிடித்துத்
திருகி விட்டதாம்!

பொல்லாக் கோபம் அம்மா எலிக்கும்
வந்து விட்டதாம்! — அது
''போடா!'' என்றே அண்ணன் எலியை
கடிந்து விட்டதாம்!

அண்ணன் எலியோ அமைதி யின்றி
அதிர்ந்து நின்றதாம்!
''அடே! குட்டிப் பயலே! வெளியே
வாடா!'' என்றதாம்!

ஒன்றும் பேசாக் குட்டி எலியோ
ஒடுங்கி நின்றதாம்! — மிகவும்
உறுமிக் கொண்டே அண்ணன் எலியோ
வெளியே சென்றதாம்!

பூனை மாமா பொந்தின் ஓரம்
பதுங்கி யிருந்தாராம்! — அவர்
பாய்ந்து சென்று எலியின் கழுத்தைக்
கவ்வி விட்டாராம்!

வீணாய்ச் சண்டை போட்ட எலியோ — உள்ளே
பட்டுக் கொண்டதாம்!
வீற்றி ருந்த குட்டி எலியோ
தப்பி விட்டதாம்!



பெங்களூர் பாலபவனம்





"இன்றையச் சிறுவர்கள்—நாளையத் தலைவர்கள்—அவர்களது அறிவு விருத்தியாகப் பெரியவர்கள் ஆவன செய்ய வேண்டும்'' என்று அமரர் நேருஜி அடிக்கடி கூறி வந்தார் இல்லையா? அதை மனத்தில் கொண்டு பெங்களூரில் கப்பன் பார்க்கில் பாலபவனம் என்ற பெயரில் ஒரு குழந்தைகள் உலகம் உருவாகி யிருக்கிறது.

கர்நாடக மாநிலத்தின் கல்வி, மற்றும் இளைஞர்கள் இலாக்கா இந்தக் குழந்தைகள் உலகை நிர்வகிக்கிறது.

சிறுவர், சிறுமியர் பள்ளி நேரம் போக மீதி நேரங்களில் இங்கு சுதந்திரமாக வரலாம்.

இங்கே நடனம், நாடகம், பாட்டு, சித்திரக்கலை மற்றும் வண்ண ஓவியம் தீட்டும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வார விடுமுறை நாட்களில் காகிதங்களை வெட்டிப் பூக்கள் செய்தல், களி மண்ணால் பொம்மைகள் செய்தல் முதலிய





காவிரி!

காவிரியாம் காவிரி!
கற்பகமாம் காவிரி!
பூவிரியும் சோலையில்
பொன்விரியும் காவிரி!

தண்ணீராம் காவிரி!
தமிழ்மன்னர் காவிரி!
புண்ணியமாய் ஊர்தோறும்
புகுந்துவரும் காவிரி!

தேன்பாலாம் காவிரி!
தென்பாங்குக் காவிரி!
வான்பாரா தோடியே
வளமூட்டும் காவிரி!

— தமிழழகன்

கண்ணன் பிறந்த நாள்

கண்ணன் பிறந்த நாள்! இன் றைக்குக்
கோகு லத்தில் கொண்டாட்டம்!
கம்சன் போன்ற கொடுமைக் காரக்
கயவர்க் கெல்லாம் திண்டாட்டம்!

வண்ணம் கொண்ட உடைகள் பூண்டு
மகிழ்ச்சி யோடு வண்டாட்டம்!
வழியில் எல்லாம் சிறுவர் கூட்டம்!
வாழ்த் தொலி! கற் கண்டாட்டம்!

பாட்டு, நடனம், கோலாட் டங்கள்!
பஜனைக் கூட்டம் கரகாட்டம்!
பாலும், தயிரும், மோரும் வழியில்
பருகிக் கூட்டம் பசியோட்டும்!

வீட்டில் எல்லாம் திருநாள்! கூடும்
விருந்தி னர்க்குக் களியாட்டம்!
விண்ணில் ஏறி வெடிக்கும் வாணம்
வீதி எங்கும் ஒளி கூட்டும்!

கண்ணன் பிறந்த நாள்! இன் றைக்குக்
கோகு லத்தில் கொண்டாட்டம்!

— நா. சீ. வரதராஜன்

வற்றில் இங்கு பல ஆசிரியைகள் சிறுர் களுக்குப் பயிற்சி அளிக்கிருர்கள்.

நடமாடும் நூலகம்

பாலபவன் நிர்வாகிகள் ஒன்றே முக்கால் லட்ச ரூபாய் செலவில் குழந்தைகளுக்கென்றே ஒரு நட மாடும் நூலகத்தை ஏற்படுத்தியுள்ள னர். இந்தப் பஸ்ஸில் விதம் விதமான பல குழந்தைப் புத்தகங்கள் உள்ளன.

பஸ்ஸிலேயே உட்கார்ந்து படிக்க வசதி யாக முப்பது நாற்காலிகளும் உள்ளன. இந்த நூலகம் பார்க்கிலேயே இருக்கும். வாரத்துக்கு ஒரு முறை ஏழைத் தொழி லாளிகள் வசிக்கும் பகுதிக்கும் விஜயம் செய்து அங்குள்ள குழந்தைகள் புத்த கங்களைப் படித்து மகிழ வசதி செய் கிறது. இதைத் தவிர பொது அறிவு, விஞ் ஞானம், மேடையில் பேசும் பயிற்சி முதலியனவும் சொல்லித் தரப்படு கின்றன இங்கே!

எதிர்ப் பக்கத்தில் :

1. குழந்தைகள் ஏறி அமர்ந்து இயற்கை வனப்பை ரசித்துச் சித்திரம் வரைவதற்கு ஏற்ற மர வீடு.
2. களிமண் பொம்மை தயாராகிறது.
3. இஷ்டப்படிச் சித்திரம் வரையலாம்.

இந்தப் பக்கத்தில் :

4. வானவில் விளையாட்டில்.
5. விஜயரங்கா தியேட்டர்.
6. காகித வேலைப்பாட்டுப் பயிற்சி.







பொழுதுபோக்கு!

கண்ணுக்கு இனிமையான கப்பன் பூங்கா முழுவதும் சிறுவர் சிறுமியர் இஷ்டப்படி விளையாடப் பல சாதனங்கள் உள்ளன. ஊஞ்சல், ஏணி மரம், சறுக்கு மரம், வானவில், ரங்கராட்டினம், இப்படிப் பல.

தவிர பூங்கா முழுவதையும் சுற்றி வரும் சிறுவர் ரயில் வண்டியும் இங்கே உண்டு. பெயர்: புட்டாணி எக்ஸ்பிரஸ். புட்டாணி என்றால் கன்னடத்தில் குழந்தைகள் என்று பொருளாம். அறுபது பேர்கள் பயணம் செய்ய முடியும் இந்த ரயிலில். தினமும் மாலை இரண்டரை மணி முதல் இந்த ரயில் இயங்கும். குழந்தைகளுக்குக் கட்டணம் இருபத்தைந்து காசு. பெரியவர்களுக்கு ஒரு ரூபாய். கப்பன் பூங்காவில் குழந்தைகள் குதிரை மீது அமர்ந்து ஜாம் ஜாம் என்று சவாரி செய்யலாம். இதற்காக அழகிய குதிரைக் குட்டிகள் தினமும் பூங்காவுக்கு வருகின்றன. இதற்குச் சிறுவர்களுக்குக் கட்டணம் முப்பத்தைந்து பைசாதான்! பெரியவர்களுக்கு அனுமதி இல்லை.

மைசூர் மகாராஜாவின் விக்டரி ஹாலை விஜயரங்கா தியேட்டர்' என்று பெயரிட்டு மாற்றியுள்ளனர். இங்கு பல இலவசச் சினிமாக்களும், கட்டணம்கொடுத்துப் பார்க்கும் சினிமாவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. சுமார் மூந்நூறு பேர்கள் அமர்ந்து பார்க்க இடம் உள்ளது. குழந்தைகளுக்குக் கட்டணம் ஒரு ரூபாய். பெரியவர்க்ளுக்கு ஒன்றரை ரூபாய்.

இந்தப் பால பவனத்தில் உறுப்பினர் ஆவது எப்படி? ஐந்து முதல் பதினான்கு வயதுக் குழந்தைகள் அவர்கள் பெற்றோரின் வருமானத்துக்கு ஏற்றபடி கட்டணம் செலுத்திச் சேரலாம். ஆண்டு ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய் வருமானம் உள்ள பெற்றோரின் குழந்தைகளுக்கு ஆண்டுச் சந்தா: ரூபாய் ஆறு. பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள பெற்றோரின் குழந்தைகளுக்குக் கட்டணம் ரூபாய் பன்னிரண்டு. பாலபவன் உறுப்பினர்களுக்குத் தனி 'பாட்ஜ்' உண்டு.

ஆண்டுதோறும் நவம்பர் பதினான்காம் தேதி முதல் இரண்டு வாரங்கள் இந்தப் பால பவனில் உற்சவம் போலப் பல நிகழ்ச்சிகள் நடைபெறும். சென்ற ஆண்டு குழந்தைகள் தினத்தன்று மூவாயிரம் குழந்தைகள் இங்கு பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டார்கள்.


இத்தனை சிறப்புக்களும் கொண்ட இந்தக் குழந்தைகள் உலகத்தில் மேலும் புதிதாக ஒரு பகுதி விரைவில் திறக்கப் படவிருக்கிறது. அது, பொம்மை மியூசியம். பிரதாப் ராய் மேத்தா என்ற பிரமுகர் இந்த மியூசியத்துக்காக இருபத்து நாலாயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். மொத்தம் இரண்டு லட்ச ரூபாய் செலவில் சுமார் இருநூறு ஜோடிப் பொம்மைகள் இந்த மியூசியத்தில் வைக்கப்படும். ஒவ்வொரு நாட்டுப் பொம்மைகளிலும் அந்நாட்டின் உடை, அணிகலன் மற்றும் சிகை அலங்காரம் வெளிப்படும். இந்தியாவிலேயே ஐம்பது விதமான மக்கள் உள்ளனர். இதற்கான மீதிச் செலவினை ரோட்டரி சங்கம் ஏற்கவிருக்கிறது. அச்சங்கம் பல்வேறு நாடுகளிலிருந்து இம்மாதிரியான பொம்மைகளை வரவழைக்க ஏற்பாடும் செய்து வருகிறது. இன்னும் மூன்று மாதங்களில் இந்தத் திட்டம் முடிவு பெற்று விடுமாம்! பெங்களூர் போனால் பால பவனத்தை மறக்காதீர்கள்!

—மன்னை சௌரிராஜன்

விட்டில் செய்த விஷமம்

அன்று கிருஷ்ண ஜெயந்தி பண்டிகை. அப்போது எங்கள் வீட்டில் பல இனிப்புக்களையும் காரங்களையும் என் அம்மா செய்து வைத்திருந்தாள். பிறகு வெல்லச் சீடையைச் செய்து ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தாள். பண்டிகை முடிந்ததும் சீடையைப் பங்கிட்டுக் கொடுத்தாள். நான் எல். ஜி. பெருங்காயத்தை எடுத்துத் தண்ணீரில் வைத்துச் சீடையைப் போன்று உருட்டி வைத்திருந்தேன். இரவு வேளையில் பங்கிட்டுக் கொடுக்கும்போது விளக்கு அணைந்து விட்டது. அப்போது எல். ஜி. பெருங்காய உருண்டையை எடுத்து என் தம்பி வைத்திருந்த சீடையில் சேர்த்து விட்டேன். என் தம்பி ஆசையோடு சீடையைச் சாப்பிட்டான். அப்போது பெருங்காய உருண்டையைக் கடித்தவுடன் 'தூ, தூ' என்று துப்பி எல்லாச் சீடைகளையும் தூர எறிந்து விட்டான். பெருங்காயம் பல்லிடுக்கில் அகப்பட்டால் என்னவாகும் என்று உங்களுக்குத் தெரியாதா என்ன?

– U. G. பாஸ்கர், வயது-15



முதன் முதலில்...

இந்தியாவில் முதன் முதல் ரயில்வே போடப்பட்டது 1853-ஆம் ஆண்டில் தான். அவ்வாண்டு ஏப்ரல் மாதம் 16ந் தேதி பம்பாய்க்கும் கல்யாணுக்குமிடையே முதல் ரயில் பாதை போடப்பட்டது.

○ ஜனவரி மாதம் முதல் தேதியை வருஷ ஆரம்பமாகக் கொள்வது 1752 லிருந்துதான் ஆரம்பமாயிற்று.

○ ராய்பூரைச் சேர்ந்த லார்ட் சின்ஹா என்பவர்தான் முதன் முதலில் இந்தியாவில் கவர்னர் பதவி வகித்த இந்தியர்.

○ ஐ. ஸி. எஸ். படித்த முதல் இந்தியர் சத்யேந்திரநாத் டாகூர் என்பவர் ஆவார்.

○ முதன் முதலில் தமிழ் அகராதியைத் தொகுத்தவர் வீரமா முனிவர் எனப்படும் இத்தாலிய நாட்டு பாதிரியாரான பெஸ்கி.

○ இந்தியாவில் முதன் முதல் சர்வகலாசாலை கி. பி. 1852ல் சென்னையில் நிறுவப்பட்டது.

○ முதல் காங்கிரஸில் முதல் தீர்மானத்தைப் பிரேரேபித்தவர் ஹிந்து, சுதேச மித்திரன் ஆகிய பத்திரிகைகளின் ஸ்தாபகரான ஜி. சுப்பிரமணிய அய்யர்.

○ நம் நாட்டில் முதன் முதலாகத் தந்திப் போக்குவரத்து 1851 ஆம் ஆண்டில் கல்கத்தாவுக்கும் டைமண்ட் ஹார்பருக்குமிடையே நடந்தது.

○ முதன் முதலில் மின்சார ரயில் பம்பாய்க்கும் குர்லாவுக்கு மிடையே 1925ல் ஓடியது.

— கே. வேங்கடராமன்

கேள்விகள் பத்து


குழந்தைகள் தங்களைத் தாங்களே தினமும் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் பத்து:

1. என் தோழர்களிடம் நான் அன்பாகவும் நட்பாகவும் இருந்திருக்கிறேனா?
2. பெரியவர்களிடம் நான் கருணையுடன் நடந்து கொண்டிருக்கிறேனா?
3. எளியோரை நான் துன்புறுத்தாதிருந்தேனா?
4. எல்லா உயிர்ப் பிராணிகளையும் செடிகளையும் மலர்களையும் கவனத்துடன் பார்த்துக் கொண்டேனா?
5. என் வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறேனா?
6. சாலை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்திருக்கிறேனா?
7. பெற்றோர், ஆசிரியர் போன்ற பெரியவர்களின் அறிவுரைகளின்படி நடந்து கொண்டிருக்கிறேனா?
8. என் உணவு விஷயத்தில் கச்சிதமாக இருந்திருக்கிறேனா?
9. மற்றவர்களுக்குத் தொந்தரவு தராதவனாக இருந்தேனா?
10. சரியென்று தோன்றும் விஷயத்தில் தைரியமாக நடந்து கொண்டிருக்கிறேனா?

ஜப்பானியப் பிரதமர் 'டனகா' அவர்கள் குழந்தைகளுக்காக இந்தப் பத்துக் கேள்விகளையும் வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

மரியாதை, விசுவாசம், சகோதர பாசம் ஆகிய நற்பண்புகளைப் பள்ளிக் குழந்தைகளிடையே வளர்க்க ஜப்பானியப் பள்ளிகளில் இதைத் தினமும் குழந்தைகள் கடைப்பிடிக்குமாறு ஆசிரியர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். இதை நம் நாட்டுக் குழந்தைகளும் கடைப்பிடிக்கலாமே?

— பொன்மலை பரிமளம்



ராட்சத மிருகம் - 11

பாலூட்டிகளின் காலம்

• கிருஷ்ணவேணி •



மெஸோஸாயிக் சகாப்தம் முடிவுக்கு வந்தபோது உலகில் மலைகள் தோன்றின. சீதோஷ்ண நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டன. கடுங் குளிர், வெப்பம், வறட்சி ஆகிய கால நிலைகள் தோன்றலாயின. இது ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கம். இந்தக் காலத்தை விஞ்ஞானிகள் **ஸெனோஸாய்க் எரா** (Cenozoic Era) அல்லது சமீப கால வாழ்வின் தொடக்கம் என்று அழைக்கிறார்கள். இந்தச் சகாப்தம் இன்றைக்கு அறுபது மிலியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பமாகி இருபதாயிரம் ஆண்டுகளே நிலைத்திருந்தன. இதற்கு முந்தைய இரு சகாப்தங்களும் (பாலியோஸாயிக் எரா, மெஸோஸாய்க் எரா) முறையே 335 மிலியன் ஆண்டுகளும் 120 மிலியன் ஆண்டுகளும் நிலைத்திருந்தன. இவற்றோடு ஒப்பிடும்போது ஸெனோஸாய்க் சகாப்தம் மிகக் குறுகிய காலமே நீடித்திருந்திருக்கிறது.

ஸெனோஸாய்க் சகாப்தத்தின் ஆரம்ப கட்டத்தில்தான் உலகில் **மம்மல்கள்** தோன்ற ஆரம்பித்தன. ஆதி மம்மல்கள் மிகச் சிறியனவாகவே—சின்ன நாய்களைப் போன்ற அளவிலேயே இருந்தன. விசேஷமான தோற்றமும் கிடையாது. வேறு சில மம்மல்கள் எலி, சுண்டெலி அளவே இருந்தன. ஊர்வன (ரெப்டைல்)வற்றின் கால கட்டத்தின் முடிவில் தோன்றிய இத்தகைய பிராணிகளைப் பார்த்திருந்தால், இவைகளின் சந்ததிகளா பின்னால் உலகிலே ஆதிக்கம் செலுத்தும் பிராணிகளாகப் பரிணமமடைந்தன என்று ஆச்சரியப்பட்டுப் போவார்கள். ஆனால் உண்மை அதுதான்.

மம்மல்கள் தோன்றிய காலத்தில் உலகம் பல பாகங்களில் கடுமையாகக் குளிர்ந்து போயிருந்தது. குளிர் ரத்தமுடைய ரெப்டைல்களுக்கு இந்த நிலை பாதகமாக இருந்தது. அதுவே அவற்றின் அழிவுக்கும் காரணமாயின. மம்மல்களோ சூடான ரத்தமுடைய இனம். குளிர்ச்சியான சூழலிலும் இவற்றின் ரத்தம் கதகதப்பாக இருந்தன.

ஆரம்ப மம்மல்களுக்கு அவற்றின் ரோமம் அடர்ந்த தோல் அந்தச் சூழ்நிலையில் வாழ்வதற்கு வசதியாக இருந்தன. உடலின் சூட்டைப் பாதுகாத்தது இந்த ரோமமடர்ந்த தோல். இத்தகைய அமைப்பினால் இப்பிராணிகள் மிகக் கடுமையான பனியிலும் சுறுசுறுப்பாக இயங்கின.

ஆதி மம்மல்கள் மிக வேகமாக இயங்குவதற்கு ஏற்ப அவற்றின் உடல் அமைப்பு இருந்தது. மாமிசப் பட்சிணிகளான பெரிய டினோசார்களிடமிருந்து தப்பி ஓடி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது ஆதி மம்மல்களுக்கு. ஆதி மம்மல்களில் அநேகம் மாமிசப் பட்சிணிகள்தாம். ஆகவே வேகமாக இயங்குவது இவைகளுக்குச் சாதகமாக இருந்தது.

மம்மல்கள் உலகில் அழியாமல் பல்கிப் பெருகியதற்கு மற்றொரு காரணம் ஆதி மம்மல்கள் தங்கள் குழந்தைகளைப் பாதுகாத்துப் பராமரித்தது தான். ரெப்டைல்கள் முட்டைகளை இட்டுவிட்டுப் போய்விடும். முட்டைகளும், அதிலிருந்து வெளிப்படும் சிறிய குஞ்சுகளும் உலகில் உயிர் வாழ வேண்டுமானால் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்தது. மாமிசப் பட்சிணிகளான டினோசார்களின் தயவு இருந்தால்தான் அதாவது அவைகள் கருணை காட்டி உயிரோடு விட்டால்தான் வாழ முடியும். ஆனால் மம்மல்களோ தங்கள் குட்டிகளைத் தங்கள் உடலிலேயே வைத்துக் காப்பாற்றின. முட்டைகளானால் அவை பொரிந்து குஞ்சுகளாக வெளிப்பட்டுப் பெரியவைகளாக வளரும் வரை அவற்றைக் கட்டிக்



காத்துக் காப்பாற்றின. குட்டிகளாகப் பிறந்தால் அவற்றுக்குத் தம் உடலிலிருந்தே பாலூட்டி வளர்த்தன. தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளும் தகுதி வரும் வரை குட்டிகளையும் குஞ்சுகளையும் மம்மல்கள் பாதுகாத்து வந்தன. ஆகவே இவற்றின் இனம் அழிந்துவிடாமல் பல்கிப் பெருகி நிலைத்து நின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மம்மல்களுக்குப் பெரிய மூளை இருந்தது. மாறும் உலகத்துக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொண்டு வாழும் தகுதியை அந்த மூளை அவற்றுக்குப் போதித்தது. மம்மல்களின் சகாப்தத்தில் — அந்தச் சகாப்தம் இன்றும் நிலைத்து வருகிறது. மனிதர்களான நாமும்கூட மம்மல்களின் இனத்தவர்களே — பல்லாயிரம் வகையான மம்மல்கள் தோன்றின, பல்கிப் பெருகின, அழிந்தன. மறுபடியும் புதிது புதிதான இனங்கள் தோன்றிக்கொண்டே இருந்தன.

ஆதி மம்மல்கள்தாம் மிகச் சிறியனவாக இருந்தனவேதவிர அதன் பிறகு தோன்றியவை மிகப் பெரிய உடலோடு இருந்தன. மம்மல்களில் ராட்சத உருவமுடைய ஒன்று **மெகதேரியம்** (*Megatherium*) என்பது. ராட்சதப் பிராணி என்பது இதன் பொருள். மெகதேரியம் இன்று பூமியில் வாழும் ஸ்லாத் என்ற மிருகத்தைப்போன்றது. இன்றைய ஸ்லாத்களெல்லாம் மரங்களில்தான் வாழ்கின்றன. விநோதமான இவைமரங்களிலேயே நகராமல் உறங்கிக் கிடக்கும் சோம்பேறிகள். இவற்றுக்கு நான்கு கால்கள் இருந்தாலும் பூமியில் நடப்பதில்லை. கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும். ஆனால் இதற்கு நேர் மாறான குணமுடையவை மெகதேரியம்கள். இவை முழுக்க முழுக்கப் பூமியிலேயே வாழ்ந்தன.

மெகதேரியம் என்ற இந்த ஸ்லாத் அபாயமற்ற சாகபட்சிணி. கனமான வாலும் உறுதியான பின்னங் கால்களையும் கொண்டது. பின்னங் கால்களிலும் வாலிலும் இவை உட்கார்ந்துகொண்டு முன்னங் கால்களைக் கைகள் போலப் பயன்படுத்தி வேர், கிழங்கு ஆகியவற்றைத் தோண்டி எடுக்கும். மரக் கிளைகளை முறிக்கும். இதன் கைகள் மிக்க பலம் வாய்ந்தவை. ஒரு பெரிய மரத்தையே, அவற்றின் இலைகளை உண்பதற்காக, ஒடித்து முறிக்கக் கூடிய வல்லமை பெற்றவை. இது உட்கார்ந்திருக்கும் போது இரண்டு மனிதர்களின் உயரத்துக்கு இருக்கும். இலைகளைப் பற்றிச் சுருட்டி இழுத்துச் சாப்பிட உதவும் வகையில் நீண்ட வலுவான நாக்கு உண்டு இதற்கு. வளைந்த கூர்மையான நகங்கள் வேர், கிழங்குகளைத் தோண்டி எடுக்க உதவியாக இருந்தாலும் நடக்கும்போது தொல்லை



யாக இருந்தன. பூனைகளின் நகங்களைப் போலத் தேவைப்படும்போது உள்ளுக்கு இழுத்துக் கொள்ளவும் வெளியே நீட்டும்படியான வசதியிருக்கவில்லை. இந்தக் குறைபாடே இவை அழிவதற்குக் காரணமாக இருந்தன.

கிளப்டோடன் *(Glyptoden)* என்பது ஆதி மம்மல்களில் ஒரு வகை. இன்றைய அழுங்கு எனப்படும் ஆர்மடெல்லோவைப் போன்ற தோற்றமுடையவை. இவற்றின் உடலில் ரோமம் அடர்ந்திருக்காவிட்டாலும் இது மம்மல்தான். கிளப்டோடன் சில வேளைகளில் ஒரு காளையின் அளவுகூட வளர்ந்திருக்கின்றன. இவற்றின் உடல் முழுதும் கவசங்களால் மூடப் பட்டிருக்கும். (படம்) எலும்புத் தகடு போன்ற கவசம் தலையிலும் வாலைச் சுற்றி வளையம் வளையமாகவும் வாலின் நுனியில் ஈட்டிகளைப் போன்ற அமைப்பும் இருந்தன. இத்தனை தற்காப்புக் கவசங்கள் இருந்தும் கிளப்டோடனால் தொடர்ந்து வாழ முடியவில்லை. இவை மறைந்தன. சிறிய, அதிக கவசங்கள் இல்லாத இவற்றின் சந்ததிகள் மட்டுமே தொடர்ந்து ஜீவிக்கலாயின.

ரஷ்யாவிலே பிரபலமான கிரிகெட் விளையாட்டு

நமக்கு இந்த விளையாட்டு புதுவிதமாகத் தோன்றலாம். ஆனால் இது சோவியத் நாட்டில் தொன்று தொட்டு ஆடப்பட்டு வருகிறது. பிரபல சோவியத் மேதை லியோ டால்ஸ்டாய், நோபல் பரிசு பெற்ற டாக்டர் இவான் பாவ்லோவ் போன்ற பலர் இவ்விளையாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர். இவ் விளையாட்டின் பெயர் 'கரோத்கி'.

இதுதான் விளையாட்டு.


கரோத்கி என்ற சிறு உருளைக் கட்டைகள் இருக்கும். இவற்றைப் படத்தில் காட்டியுள்ளபடி பல வடிவங்களில் வைக்கலாம். ஒரு சமயத்தில் ஐந்து கரோத்திகளைத்தான் வடிவம் அமைக்கப் பயன்படுத்த வேண்டும். கரோத்கி வைக்கும் சதுரத்தின் அளவு நான்கு சதுர மீட்டர்கள். இந்த வடிவங்களை ஒரு கம்பால் அடித்து வீழ்த்த வேண்டும். அந்தக் கம்பின் பெயர் 'பிட்டா'. அந்தக் கம்பு ஒரு மீட்டர் நீளமுள்ளது. இதன் நுனியில் இரும்புப் பூண் போடப்பட்டிருக்கும். கரோத்கி இருக்கும் சதுரத்துக்கும் அடிக்க வேண்டியவர் இருக்கும் தூரத்துக்கும் இடையே 13 மீட்டர்கள் இருக்கும். இவ்வளவு தொலைவிலிருந்து சதுரத்துள் வைக்கப்பட்டிருக்கும் கரோத்கி வடிவத்தை அடித்து வீழ்த்த வேண்டும்.

சோவியத் நாட்டில் இந்த விளையாட்டில் ஐந்து லட்சம் பேர்களுக்குமேல் ஈடுபட்டுள்ளனராம். 1930ல் 90 வடிவங்கள் 142 முறை பிட்டா போட்டு வீழ்த்தப் பட்டதாம். அதுதான் குறைந்தபட்ச பிட்டாவாம். ஆனால் ஆண்டுக்கு ஆண்டு அதிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. தற்போது இவ்விளையாட்டில் உக்ரேனைச் சேர்ந்த கே. மத்வயேவ் என்பவர் சாம்பியனாக இருக்கிறார். இவர் 90 வடிவங்களை 114 பிட்டாவிலேயே வீழ்த்தியுள்ளார்.

இவ்விளையாட்டு சர்வ சாதாரணமாகத் தோன்றினாலும் இதனை ஆடுவதற்கு மிகவும் உடல் வலிமை தேவை. சில சமயங்களில் ஒரு முறை விளையாடியதும் 'பிட்டா' போட்டவருக்கு ஒரு கிலோகிராம் எடை குறைந்து போவதும் உண்டு என்கிறார்கள்.


- பிரபல சோவியத் எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் தமது 80வது வயதில் கரோத்கி ஆடுகிறார்.
- சில கரோத்கி வடிவங்கள்.





போட்டி...

"எஸ். ஷ்யாமளா"



அம்மா கொடுத்த காப்பியைக் குடித்துக் கொண்டே ஹாலுக்கு வந்த சுமதியின் பார்வை அண்ணன் ஜக்குவின் மீது பதிந்தது. அடுத்த விளுடி அவள் பாய்ந்து ஓடினுள்.

''ஏண்டா என் பென்சிலே எடுத்துண்டே... கொடுடா...'' என்று கூவினுள்.

''முடியாது போ. உன் பென்சில் என்று எழுதி ஒட்டி யிருக்கிறதோ...அப்படித்தான் எடுப்பேன்!'' அதட்டலாகச் சொன்னுன் ஜக்கு.

''என் பென்சில்தான் இது. மூந்தாநாள்தானே அப்பா இரண்டு பேருக்கும் புதுப் பென்சில் கொடுத்தார். உன்னுேட பென்சிலேத் தொலேச்சிட்டியாக்கும்...கொடுடா என் பென்சிலே.'' சுமதி ஜக்குவினிடமிருந்து பிடுங்க முயன்ருள். ஜக்கு நறுக்கென்று சுமதியின் தலேயில் குட்டினுன். அடுத்த விநாடி 'ஹோ' என்று அலறல் எழுந்தது.

''அடாடாடா... பொழுது விடிந்து எழுந்து ராத்திரி கண்ணே மூடுகிற வரையில் இதே ரகளே தாளு? சிச்சி, என்ன குழந்தைகள்...டேய்...ஜக்கு... என்னடா!'' பவானி சமையல் அறையிலிருந்தே அதட்டினுள்.

''ஒண்ணுமில்லேம்மா...என் பென்சிலே ஸ்கூல்லே டெஸ்கிலே வைச்சுட்டு வந்துட்டேன். இப்ப கொஞ்சம் டிராயிங் போட இவளோட பென்சிலே எடுத்துண்டேன். அதுக்குள்ளே பிடுங்க வராம்மா....''

''இவன் மட்டும் அன்னிக்கு நான் ரப்பர் கேட்டப்ப தரமாட்டேன்னுன். இப்ப என்னுேட பென்சிலே மட்டும் எடுத்துக் கொள்ளலாமோ? கேட்டா தலேயிலே குட்டருன்.'' விம்மலின் பின்னணியுடன் சுமதி கூறினுள்.

''என்ன சண்டையோ, என்ன பூசலோ! இருக்கிறது இரண்டு. எப்பவும் எலியும் பூனேயுமா இருக்கிறதுகள்.'' அலுத்துக் கொண்டே கைவேலேகளேக் கவனிப்பதில் ஈடுபட்டாள் பவானி.

ஹாலில் அமர்க்களம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.


''நான் கணக்குப் போடணும். கொடுடா பென்சிலே....'' முரண்டினுள் சுமதி.

''இந்தா, இதனுலே கணக்குப் போடு'' என்று சுண்டு விரல் அளவுக்கு இருந்த ஒரு பென்சில் புழுக்கையை நீட்டினுன். அவன் கண்களில் குறும்பு.

''போடா இந்தப் 'புழுக்கை' ஒண்ணும் வேண்டாம். என்னுேடதைக் கொடு. இல்லாட்டா இப்ப அப்பா வந்ததும் சொல்லி விடுவேன்.''

''சொல்லேண்டி....என்ன பயம்? உன்கிட்டே இரண்டு பென்சில் இருக்கிறதே...அதில் கணக்குப் போட முடியாதோ? என்கிட்ட வம்புக்கு வந்தியாளு நொறுக்கிடுவேன் நொறுக்கி.'' சிங்கம் போலக் கர்ஜித்தான் ஜக்கு.

''ஜக்கு.... மக்கு.... கொக்கு...'' என்று இதழ்களேக் கோணி அழகு காட்டியபடி நகர்ந்தாள் சுமதி. அவனுக்குச் சரியாக அவளால் சண்டை போட முடியாது. தோற்றுப் போகவும் இஷ்டப்படாமல் முணு முணுப்பாள். சில சமயத்தில் அழுது அமர்க்களம் பண்ணுவாள்.



''என்னடி ஆலாபனை பண்றே?'' என்று கேட்பார் அப்பா.

''சங்கீத வித்வானோட பொண்ணாச்சே! ஆலாபனை பண்ணுகிறாள்'' அம்மா எரிச்சலுடன் சொல்லுவாள். அப்பாவோ சிரிப்பார். தினமும் ஏதாவது வம்பும் சண்டையும் அண்ணன் தங்கைக்கும் இடையே நடக்கும்.

''அம்மா இதைப் பாரம்மா. என்னோட அப்பளத்தை எடுக்கறான்...'' சுமதி கூவுவாள். அவள் வாயை அடக்க அம்மா இரண்டு அப்பளத்தைத் தட்டில் போடுவாள்.

''எனக்கும் அம்மா ...'' என்பான் ஜக்கு. பவானி அவனுக்கும் போடுவாள்.

''ஏம்மா, என்னோடதையும் எடுத்துண்டுட்டானே...அவனுக்கு மட்டும் மூணு....?''

''போனால் போறது போ... நீ சமர்த்தோன்னோ ராத்திரி போடறேன். சீக்கிரம் சாப்பிடுடீ கண்ணு... பள்ளிக்கூடத்துக்கு நேரம் ஆச்சே'' என்று பவானி சமாதானப்படுத்துவாள். ஜகந்நாதன் வெற்றிப் புன்னகையுடன் முகம் மலரச் சாப்பிடுவான். எழுந்து போகும்போது சுமதியின் பின்னலை இழுத்துவிட்டுப் போவான்.

''வவ்வவ்வே.... ஜக்கு மக்கு... கொக்கு....'' தன் இயலாமையை அழுத்தம் திருத்தமாகப் பற்களைக் கடித்துக் கொண்டு சொல்லுவாள்.

சுமதியும் ஜகந்நாதனும் ஒரே பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் சேர்ந்து ஒரு நாளும் பள்ளிக்குப் போக மாட்டார்கள். சேர்ந்து வரவும் மாட்டார்கள். இடைவேளையின்போது சிலசமயம் சுமதி ஜகந்நாதனிடம் சென்று ஏதாவது கேட்பாள். அவன் சிடுசிடுப்பான்.

''ஏண்டி இங்கெல்லாம் வர்றே....? போ... வராதே...'' என்று விரட்டி விடுவான். அவளும் பதிலுக்கு முகத்தை அழகுகாட்டிவிட்டு ஓடுவாள்.

அன்று மாலை சுமதி பள்ளியை விட்டுக் கிளம்பச் சில நிமிஷங்கள் தாமதமாகி விட்டது. அவளுடைய தோழிகள் எல்லோரும் போய் விட்டிருந்தனர். சுமதி தனியாகப் புத்தகப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு தெருவில் ஓரமாக நடந்து கொண்டிருந்தாள். திடீரென்று அவள் அருகில் சைக்கிள் மணி கிணிங் கிணிங் என்று ஒலித்தது. அவள் பயந்து ஒதுங்கினாள். சைக்கிளில் வந்த அவள் வகுப்புப் பையன் அவளுடைய பெட்டியைத் தட்டி விட்டான். பள்ளிக்கூடத்தின் காம்பவுண்டுச் சுவர் ஓரமாக இருந்ததால் அருகில் யாரும் இல்லை. சில சிறுவர்களும் சிறுமிகளும் முன்னும் பின்னும் போய்க் கொண்டிருந்தனர். பெட்டி படீரென்று கீழே விழச் சுமதி பயத்தில் 'வீல்' என்று அலறினாள். அதற்குள் இன்னொரு சிறுவன் ஓடி வந்து திறந்து கிடந்த பெட்டியிலிருந்து 'கோகுலம்' இதழைச் சட்டென்று எடுத்துக் கொண்டு ஓடினான். சைக்கிளில் வந்த பையனும் இறங்கி இருவரும் வேகமாக நடக்க ஆரம்பித்தனர். அப்போது அவர்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த சில சிறுவர்கள் 'வீல்' என்ற அலறலையும் படீரென்று பெட்டி விழுந்த சத்தத்தையும் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

சுமதி அழுதபடி கீழே கிடந்த புத்தகங்களைப் பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தவள் பளீர் பளீர் என்று ஒலிகேட்டுச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவளைத் தள்ளி விடுவதுபோல் வந்த சிறுவனின் சட்டையை இழுத்துப் பிடித்துக் கொண்டு ருத்ரமூர்த்திபோல நின்றிருந்தவனைக் கண்டாள். 'ஜக்குவா...அவள் அண்ணனா...? அவனா அந்தப் பையனை அடித்தான்?' அவள் வியப்புடன் அண்ணனையே பார்த்தாள். அந்தச் சிறுவன் கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டான். மற்றவனிடமிருந்த 'கோகுலம்' இதழை வெடுக்

கென்று பிடுங்கிக் கொண்டான் ஜகந்நாதன்.

''என்னடா... என்ன நினைச்சே...? ஒரு பொண்ணு தனியாப் போறா இப்படித்தான் பண்ணுறதா... ஏண்டா?'' மிரட்டினான். பிறகு தங்கையிடம் கோகுலத்தைத் தூக்கிப் போட்டான். ''சீக்கிரம் எடுத்துண்டு வீட்டுக்குப் போ... உம்...'' என்று சீறினான். சுமதி பரபரப்புடன் எழுந்து வேகமாக வீட்டை நோக்கி நடந்தாள். அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தாள். அந்தச் சின்னஞ் சிறு மனத்தில் ஏதோ சிந்தனைகள் வளையமிட்டன. ஜக்குவின் போக்கு அந்தப் பிஞ்சு உள்ளத்தில் புதுமையான சிலிர்ப்பை உண்டாக்கியது. எப்பவும் அண்ணனின் உருட்டலையும் மிரட்டலையுமே அனுபவித்த இதயத்தில் இன்று அன்பின் மலர்ச்சியையும் கண்டாள். இனம் புரியாத ஆனந்தம் உண்டாயிற்று. வீட்டில் எப்போதும் சண்டை போடுகிறவன்தான். அவளை அழவைக்கிறவன் தான். ஆனாலும் ஆபத்தில், துன்பம் நேரும் சமயத்தில் அவளைப் பாதுகாக்கிறவனும் அவன்தான். அவனுக்கு அவளிடம் பாசம் இருக்கிறது என்று உணர்ந்து கொண்டாள். அவளுக்கு டீச்சர் சொன்னது நினைவுக்கு வந்தது. மேலெல்லாம் முள்ளு முள்ளாக இருந்தாலும் உள்ளே பலாச் சுளைகள் எத்தனை இனிப்பாக இருக்கும்!

அன்றிலிருந்து ஜக்கு எதை எடுத்தாலும் சுமதி ஏன் என்று கேட்பதில்லை. அவனோடு வாதாடுவதில்லை. ஜக்கு மக்கு கொக்கு என்று முணுமுணுப்பதில்லை. ஜகந்நாதனும் தங்கையோடு சேர்ந்து நடக்காவிட்டாலும் அவளை முன்னே நடக்க விட்டுப் பின்னால் தொடர்ந்து வர ஆரம்பித்தான்.

''ஆமாம், பவானி... இப்ப சுமதி ரொம்பச் சமர்த்தா ஆகிவிட்டாளே... அவள் ஆலாபனை பண்ணுகிறதே இல்லையே...'' என்றார் அப்பா ஒரு நாள்.

''நீங்கள் பண்ணுகிற ஆலாபனையைக் கேட்டுக் குழந்தை பயந்து வாயை மூடிக் கொண்டு விட்டாளோ என்னவோ!'' என்றாள் பவானி.

சுமதி சிரித்துக் கொண்டாள்.



மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவனுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்ளேடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசிய மான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்


டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்: 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும் உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்


175 ml.
Incremin
syrup
VITAMINS B1, B6, B12
LYSINE
WITH IRON
TONIC APPETITE
STIMULANT
Incremin
syrup

தெரியுமா ?



1933. பூ ஆகர்ஷணம், (புவி ஈர்ப்பு) திடீரென்று இல்லாமல் போனால் என்ன ஆகும்?

1934. ஒலி பெருக்கியை (லவுட்-ஸ்பீக்கர்) கண்டு பிடித்தவர் யார்?

1935. காலத்தைக் கணக்கிடுவதற்கான விஞ்ஞானப் பெயர் என்ன?

1936. விண்ணிலே பறப்பதற்கான தத்துவத்தை விளக்கும் விஞ்ஞானத்துக்கு என்ன பெயர்?

1937. கையெழுத்துக்களை ஆராய்வதற்கான விஞ்ஞானப் பெயர் என்ன?

1938. மோட்டார் காரில் ரேடியேட்டர் எதற்காக உள்ளது?

1939. கோடையில் கடிகாரங்கள் மெதுவாகப் போவதேன்?

1940. உறுதியான வானக் கப்பலை முதன் முதலில் கட்டியவர் யார்?

1941. இரும்பைத் துருப்பிடிப்பதிலிருந்து காப்பாற்ற அதன் மீது துத்தநாகப் பூச்சுத் தருவார்கள். இதற்கு என்ன பெயர்?

1942. ஒரு பொருள் கறுப்பாகத் தோற்றமளிப்பது எதனால்?

1943. விசைத் தறியைக் கண்டுபிடித்தவர் யார்?

1944. இன்சுலின் என்ற மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?

1945. திரவங்களிலேயே மிகவும் கனமானது எது ?

1946. உடலின் ரத்த ஓட்டத்தைச் சீராக வைத்திருக்கும் ஓர் உறுப்பு நம் உடலில் உள்ளது. அது எது?

1947. பாதுகாப்பான தீக்குச்சியைக் (ஸேஃப்டி மாட்ச்) கண்டவர் யார் ?

1948. மனித உடலின் அழகைப் பற்றி ஆராயும் இயலுக்கு விஞ்ஞானப் பெயர் ஒன்று உண்டு. அது தெரியுமா?

1949. மிக அதிகமான உஷ்ண நிலையில் கொதிக்கும் பொருள் (பாய்லிங்) பொருள் எது ?

1950. மின்சார இஸ்திரியை (*Electric Flat Iron*) கண்டு பிடித்தவர் யார் ?

1951. உலகிலேயே மிகப் பெரிய ஃபுட்பால் ஸ்டேடியம் எங்குள்ளது ? என்ன பெயர் ?

1952. உலகின் மிகப் பலசாலியான மனிதர் யார் ?

1953. சர்வதேச விளையாட்டுக்களில் எம். சி. சி. என்றால் எதைக் குறிக்கிறது தெரியுமா ?

1954. கட்டுடல் கொண்ட மனிதனுக்குப் பாரதத்தில் வழங்கப்படும் பட்டம் என்ன? (*Best Physique*)


1955. எந்த நாடு, 1970ல் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அதிகமான பதக்கங்களைப் பெற்றது?

1956. சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிக்கான காலம் (*Duration*) எவ்வளவு ?

1957. கியூபா என்றதும் உங்களுக்கு யாருடைய பெயர் நினைவுக்கு வருகிறது ?

1958. டாக்டர் தர்மேந்திரா எதற்காகப் புகழ் பெற்றவர் ?

தெரியுமே!



1933. பூமியில் வாழும் ஜீவராசிகளெல்லாம் வான - வெளியிலே மிதக்கும். 1934. அமெரிக்காவைச் சேர்ந்த ரைஸ்கெல்லாக் என்பவர் 1924ல் கண்டுபிடித்தார். 1935. ஹோராலஜி (Horology). 1936. ஆரோடைனமிக்ஸ் என்று. 1937. கிராஃபாலஜி (Graphology). 1938. என்ஜினின் சுவர்கள் சூடாவதிலிருந்து தடுக்க எப்போதும் குளிர்ந்த நீர் ஓடிக்கொண்டிருக்கும்படி செய்ய. 1939. உஷ்ணத்தில் உலோகங்கள் விரியும். இதனால் கடிகாரத்தின் பெண்டுலம் நீளம் அதிகமாகிறது. அதிக நீளமான பெண்டுலத்தின் பிரயாண தூரம் அதிகமாகிறது. இக் காரணங்களால் மெதுவாகப் போகிறது. 1940. ஜெர்மனியைச் சேர்ந்த வான் செப்ளின். 1941. காலவனைஸ்டு இரும்பு என்று பெயர். 1942. ஒரு பொருள் தன்மீது விழும் ஒளிக்கதிர்களையெல்லாம் தன்னகத்தே அழுத்திக் கொண்டு விடுமானால் அப்பொருள் கறுப்பாகத் தோன்றும். 1943. இங்கிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் காட்ரைட் 1785ல் கண்டார். 1944. சர் பிரடரிக் கிராண்ட் பாண்டிங் என்பவர். 1945. பாதரஸம். 1946. இருதயம். 1947. ஜே. இ. லுண்ட் ஸ்ட்ராம். ஸ்வீடனைச் சேர்ந்தவர். 1948. காலாலஜி (Kalology). 1949. டான்டாலம் என்ற பொருள் 6000 டிகிரி செண்டிகிரேடில் இது கொதிக்கும். 1950. ஹெச். டபிள்யூ. (H. W. Seeley) அமெரிக்கர். 1951. பிரேஸில் நாட்டிலுள்ள ரியோடிஜனிரோவில். மரகானு ஃபுட்பால் ஸ்டேடியம் என்று பெயர். 1,50,000 பேர்கள் அமர்ந்து காணலாம். 1952. ரஷ்யாவைச் சேர்ந்த கனம் தூக்கும் வீரர் அலெக்ஸீவ் (Alexcieve). 1953. மார்ல்போன் கிரிக்கெட் கிளப் (Marylebourne Cricket Club). 1954. பாரத்ஸ்ரீ என்ற பட்டம். 1955. ஜப்பான் - தங்கம் 74, வெள்ளி 47, வெண்கலம் 23 மொத்தம் 144. 1956. தொண்ணூறு நிமிஷங்கள். 1957. ஃபிடல் கேஸ்ட்ரோ. 1958. தொழு நோய் ஒழிப்புக்காகக் கணிசமான வகையில் ஆராய்ந்து பரிசுகள் பெற்றவர்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

THERE ARE ONLY TWO KINDS OF WOMEN-



THOSE WHO READ *femina* AND THOSE WHO DON'T

WHICH KIND ARE YOU?

If you are not already one among our 16 lakh readers*, do yourself a favour.....start ordering your copies of Femina today.

Twice every month, Femina will speak on issues that need to be talked about. We will take you from the metros to the suburbs, from the small towns to the villages, to show you the new Indian woman at work and in the home. We will bring you her ideas on health, politics, the economy, clothes, furniture, films and books—the whole business of living—right up to your doorstep. Maybe you will want to give Femina to your husband, your children, your friends. So that they can understand you better. Don't wait another day !

BUY YOUR COPY TODAY!!

*Source : ORG Survey

femina

INDIA'S FASTEST GROWING FORTNIGHTLY

REGISTERED NO. M. 9040